தென்னகத்

தலைவன்

ஆசிரியர்: தினகரன்

விலை 16 காசு

Anand

தேசிய ஒருமைப்பாடும்—திராவிடநாடும்

தேசீய ஒருமைப்பாடு என்றால் என்ன?

அரசியல் வாதிகள் இதற்கு விளக்க ஆய்வுரைகள் தரக் கூடும்.

புலவர்கள் இதுபற்றி அழகான கட்டுரைகள் எழுத முடியும்.

ஆனால் திராவிடம் ஒரு தேசீயம், இயற்கைத் தேசீயம். ஆகவே அது விளக்கம் தரவில்லை. அழக்குக்கட்டுரைதீட்டவில்லை. பீரங்கியிலிருந்து குண்டு வெடித்தாற்போல, ஒருமைப்பாட்டின் தேவை ஏற்பட்டவுடனே, அது ஒருமைப்பாட்டைச் செயல் வடிவில் வெளியிட்டது!

திராவிடத்தின் விடுதலைக்காகப் பாடுபடும் இயக்கம் தி. மு. க. ஆனால் அது அந்த விடுதலை இயக்கத்தையே ஒத்திப்போட்டுவிட்டுப் போர் இயக்கம் நடத்தக் கிளர்ந்தெழுந்து விட்டது. திராவிடத்தின் விடுதலைக்குப் பின்னணியாக விளங்குவது இந்திய மாநில வாழ்வு. உலகம் இருந்தால் தானே அதில் இந்தியா இயங்க முடியும். இந்தியா இருந்தால் தானே திராவிடம் அதில் தன் விடுதலைத் தேசீய திட்டத்தை நடத்த முடியும்? ஆகவே 'இப்போது இந்திய மாநில வாழ்வைக் காக்கப் புறப்படுங்கள்' என்று கட்டளையிட்டார் தி. மு. க.வின் ஒப்பற்ற அறிவுத் தலைவர், தென்னாட்டுக் காந்தி அறிஞர் அண்ணா! மாநில வாழ்வை விழுங்கப் புறப்பட்டிருக்கிறது சீனப் பொதுவுடைமை வேதாளம்!'வேதாளத்தை ஓட்டி இந்திய மாநிலம் காக்கப்படுவது வரை,நமக்குள எதிரி வேறுகிடையாது—சீன வேதாளம் ஒன்று தான் எதிரி. மாநில வாழ்வு அமைதி பெறும் வரை, நம் தேசீயப் போராட்டத்தையே ஒத்திவையுங்கள்' என்று அறிஞர் கட்டளையிட்டு விட்டார்.

தென்னாட்டுக் காந்தியடிகளின் இந்தக் கட்டளையில் அடங்கியுள்ள அரசியல் படிப்பினைகள், தேசீயப் படிப்பினைகள் பல. உயிர்த் தேசீய இயல்பு கண்டோர், உயிர்த் தேசீயத் தலைவன் தன்மை உணர்ந்தவர்களன்றி மற்றவர்கள் அதை உடனடியாகக் காண முடியாது.

அறிஞர் அண்ணா, தென்னாட்டுக் காந்தி இப்போது தென்னாட்டுத் தேசீயவாதி, திராவிடத் தேசீயங் காணத் துடிக்கும் உயிர்த்தலைவனாக மட்டுமே காட்சியளிக்கிறார். ஆனால் அவர் தென்னாட்டுத் தேசீயவாதி மட்டுமல்ல, உலகத் தேசீயவாதி! ஒரு புறம் அவர் இத்தாலிய விடுதலைத் தலைவன் மாஜினியையும், அமெரிக்க விடுதலைத் தலைவன் ஜார்ஜ் வாஷிங்டனையும், சைப்ரஸ் விடுதலை வீரர் மகாரியாஸ் பாதிரியாரையும் பற்றிக் கனல் தெறிக்கும் எழுத்துக்களில் எழுதியும் சுடர் வீசும் சொற்களில் பேசியும் திராவிடத்தேசீயவாதிகளுக்கு உணர்ச்சியூட்ட 'முனைந்திருக்கிறார். ஆனால் இந்த வரலாறுகளைக் கண்டு எடுத்துரைப்பது உணர்ச்சியூட்டுவதற்காக மட்டுமல்ல. விடுதலைப் போராடப் படிப்பினைகளைத் திராவிட தேச மக்களுக்கு உணர்த்துவதற்காக மட்டுமல்ல. திராவிடநாடு விடுதலையைப் போலவே உலகெங்கும் உள்ள விடுதலை இயக்கங்களை அவர் வரவேற்கிறார். உலகில் எங்கே விடுதலைக் கனல் கொதித்தெழுந்தாலும்—அது காவிரிக் கரையானாலும் சரி, கங்கைக் கரையானாலும் சரி, நீலாற்றங் கரையிலோ,அமேசான் ஆற்றங் கரையிலோ ஆனாலும் சரி—அந்த விடுதலை இயக்கங்களனைத்துக்கும் தென்னாட்டுக் காந்தி நண்பர் — அந்தந்த நாட்டுக் காந்தியாய் நின்று அந்தந்த நாட்டு விடுதலைத் துடிப்புக்களில் துடிப்பது அவரது காந்தீய உள்ளம்.

அறிஞர் அண்ணாவின் தேசீயத்தில் இன்னொரு சிறப்புப் பண்பும் உண்டு. அவர் தேசியம் நாட்டு விடுதலைத் தேசீயம் மட்டுமன்று. மக்கள் விடுதலையிலும் அறிவியக்கங்களிலும்அவர்சரிசமஆர்வம்காட்டியுள்ளார். தேசிய விடுதலைத் தலைவர் மாஜினியை எவ்வளவு பாரதியாரைப் போல மக்களரங்குக்கு அவர் அறிமுகப் படுத்தினரோ, அதிலும்குறையாத அளவில் மக்கள்விடுதலையில் ஆர்வங்கொண்ட பிரெஞ்சுப் புரட்சியையும், அதன் முன்னோடியான மக்கள் உரிமை இயக்கமுதல்வர் ரூசோவையும்,பகுத்தறிவியக்கமுதல்வனான வால்டேரையும், மக்கள் மன்றத்தின் முன் கொணர்ந்து அவர்களிடையே பரப்பினார்? திராவிட நாட்டு விடுதலையைப் போலவே திராவிட நாட்டு மக்கள் உரிமைகளிலும், நல்வாழ்விலும், அது போலவே உலக நாடுகளின் விடுதலை இயக்கங்களிலும், மக்கள் உரிமை இயக்கங்களிலும், உலகப் பகுத்தறிவியக்கங்களிலும் அவர்தம் அறிவுக் கண்களையும் கலைப்பண்பையும் ஓடவிட்டு 'ஒருலகில் திராவிடம்' எனும் உயர் குறிக்கோள் வழி உழைக்கின்றார்.

திராவிடத் தேசீயம் திராவிடத்துக்காகச் சிறப்பாக உழைப்பதுடன் உலக விடுதலைக்காகவும் அதே சமயம் பொது முறையில் உழைப்பதாக அமைந்ததனால்தான், மற்ற எந்தத் தேசியமும் செய்யாத வகையில் அது தன் விடுதலை இயக்கத்திடையே கூட மாநில வாழ்வுக்கான போராட்டத்தை முன்வைத்துஅவ்விடுதலை இயக்கத்தையே ஒத்திப் போடத் துணிந்தது.

தென்னாட்டுக் காந்தியின் இந்தச் செயலில், திராவிட இயக்கத்தாருக்கும் திராவிட நாட்டாருக்கும் மட்டுமின்றி, காங்கிரஸ் போன்ற மற்ற இயக்கத்தினருக்கும் இந்திய மாநில மக்களுக்கும் உரிய இன்னொரு படிப்பினையும் உண்டு. இதுவே திராவிட இயக்கத்தினருக்கும் பிற மாநில இயக்கத்தினருக்கும் வருங்காலத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்த படிப்பினை ஆகும்.

இந்தியா விடுதலை அடைந்த அன்றே பாகிஸ்தான் விடுதலை அடைந்திருந்தது. ஆனல் கிட்டத்தட்ட அதே நாட்களிலே அல்ல சற்று முன்பின்னாகவே, பர்மாவும் இலங்கையும் விடுதலை அடைந்தன. இந்தியாவுடன் பாகிஸ்தானைப் போலவே பர்மாவும் இலங்கையும், மலாயாவும், சிங்கையும் பிரிட்டிஷ் ஆட்சியில் ஒரு கொடிக்குள் இணைந்தே வாழ்ந்திருந்தன. விடுதலையின் பின் தனி நாடுகளாக வாழ்க்கைத் தொடங்கினாலும், அந்த விடுதலையின் முன்னே, பின்னே, பர்மாவுக்கும் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே அண்ணன் தம்பி நேசம். அக்காள் தங்கை பாசம் தவிர வேறு எத்தகைய உறவும் கிடையாது. உண்மையில் பர்மாவில் என்னென்னவோ உட்குழப்பங்கள், கொந்தளிப்புக்கள் ஏற்பட்ட போதும் கூட, இந்தியாவும் இந்திய மக்களும் அந்நாட்டு வாழ்வுக்கு ஆறுதலுக்கிடமாக, அருகிலிருந்து வீசும் தென்றலாகவே இயங்கின என்பதை நாம் மறப்பதற்கில்லை. இலங்கை, மலாயா, சிங்கை ஆகியவற்றின் செய்தியும் இதுவே.

தமிழ்த்தாய் அவ்வையார் பாட்டு ஒன்று உடன் பிறந்தே கொல்லும் வியாதிபற்றியும், உடன் பிறவா மாமலையிலுள்ள மருந்து பற்றியும் அழகிய உவமை சான்ற அரசியல் படிப்பினை தருகிறது. என்ன காரணத்தினாலோ, யார்செய்த சூழ்வினையாலோ, விடுதலை நாளைக்கு முன்னும் சரி, பின்னும் சரி, பாகிஸ்தான் இந்தியாவுக்குக் கிட்டத்தட்ட ஓர் உடன் பிறந்த வியாதியாகத் தான் இயங்கி வருகிறது. ஆனால் இந்தியாவை ஆண்ட அயல் நாடாகிய பிரிட்டன் எப்படியும் உடன் பிறவா மாமலையையும், பர்மா இலங்கை மலாயா ஆகிய நாடுகள் மாமலை மருந்தையுமே நினைவூட்டுகின்றன. இதுமட்டுமன்று, அமெரிக்கா பிரிட்டன் போன்ற நாடுகளைவிட நம் நேரு பிரானின் இந்தியா அதிகமாகக் கூடிக்குலவிய காதல் நண்பர்கள் சீனாவும் ரஷ்யாவும் தான். ஆனல் எவ்வளவு வால் குழைத்து விளையாடினாலும் வேதாளக் காதல் வேதாளக் காதல்தான்,கரடிக்காதல், கரடிக் காதல்தான் என்பதைச் சீனாவும், ரஷ்யாவும் மெல்லக் காட்டிக்கொண்டு வருகின்றன. அவர்கள் பொதுவுடைமைத் தத்துவமெல்லாம் உலகைத் தங்கள் தங்கள் வயிற்றில் அடக்கும் பொதுவுடைமைத் தத்துவமாகவே அமைந்துள்ளன.

திராவிட விடுதலை இயக்கம் இலங்கை விடுதலை இயக்கம்

(11-ம் பக்கம் பார்க்க)

மலர்-1 | 18-11-62 | இதழ்-4

தூர விலகி நில் பகையே துள்ளி வருகுது வேல்!

அறிஞர் அண்ணா அவர்கள் வேலூர்ச் சிறையின் நீண்ட மதிற் சுவர்களுக்கிடையே பூட்டி வைக்கப்பட்டிருந்தபொழுது, சீனப் படையெடுப்பின் ஆரம்பக் கட்டம் நடந்துகொண்டிருந்தது.

கம்யூனிஸ்ட் கட்சியைத் தவிர எல்லாக் கட்சிகளும், தி. மு. கழகம் உள்பட சீனப் படையெடுப்பைக் கண்டித்துக்கொண்டிருந்தது.

தி.மு.கழகத்தின் அபரிமிதமான வளர்ச்சிகண்டுவாயொடுங்கிப்போன கம்யூனிஸ்டு கட்சியும், காங்கிரஸ் கட்சியும் இந்த நேரத்தில் ஓர் நப்பாசையில் நாக்கை நனைய விட்டுக்கொண்டிருந்தன.

தி. மு. கழகத்தின் இதயமான அறிஞர் அண்ணா அவர்கள் வெளியில் வந்ததும், சீனாக்காரன் படையெடுப்பைக் கண்டிப்பதோடு, திராவிடநாடு முழக்கத்தையும் தீவிரமாகச் செய்வார்.

அதைப் பிடித்துக்கொண்டு, ''கேட்டீர்களா பொதுமக்களே மாற்றான் படையெடுத்துவந்து நமது மண்ணை வளைத்துக்கொண்டிருக்கிறான். இந்தச் சமயத்தில் இவர்கள் பிரிவினை கேட்கிறார்கள், இது தேச துரோகச் செயலல்லவா? இவர்களுக்கு நீங்கள் ஆதரவு தரலாமா? முதலில் இவர்களை ஒழித்துக்கட்டப் புறப்படுங்கள்'' என்று கூட்டத்தைக் கூட்டி கூச்சல் போடலாம் எனக் கனவு கண்டுகொண்டிருந்தார்கள் காங்கிரசாரும், நமதருமைக் கம்யூனிஸ்டு நண்பர்களும்!

வேலூர்ச் சிறையிலிருந்து விடுதலை பெற்ற அறிஞர் அண்ணா அவர்கள் முதல் கூட்டத்தில் பேசும்பொழுது "சீனப் படையெடுப்பு முடியும்வரை திராவிடநாடு முழக்கத்தையும், காங்கிரஸ் எதிர்ப்புப் பிரச்சாரத்தையும் ஒத்தி வைத்து, சீன ஆக்கிரமிப்பை முறியடிக்க, இந்திய அரசின் கரத்தை வலுப்படுத்தும் வகையில் நாம் ஒத்துழைக்க வேண்டும்'' என முரசொலித்தார்கள்.

இந்த முழக்கம் வேறுவிதமாக நினைத்துக்கொண்டிருந்த நரிகளின் எண்ணத்தில் சம்மட்டியாக விழுந்தது. இரண்டு கட்சிகளும் இன்று தேள் கொட்டிய திருடன் நிலையில் வேதனைப் பட்டுக்கொண்டிருக்கின்றன.

நாட்டுமக்களுக்கு விடுதலை உணர்ச்சியை ஊட்டுவதானாலும் சரி, சூழ்நிலையை அனுசரித்துப் பொது உணர்ச்சியை ஏற்படுத்துவதானாலும்சரிதென்னகத்துமக்கள் அந்தத்தலைவன்பேச்சுக்கே கட்டுப்பட்டுக் கிடக்கிறார்கள் என்பதை வட இந்தியத் தலைவர்கள்கூட தெரிந்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அதனால்தான், மாநிலங்கள் அவையில் அறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துச் சொல்லிய கருத்துரையை உள்துறை அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி சிறப்பாகக் குறிப்பாகப் பாராட்டிப் பேசியிருக்கிறார். நன்றி தெரிவித்திருக்கிறார்.

அறிஞர் அண்ணா அவர்கள் மாநிலங்கள் அவையில் பேசும் பொழுது ஒரு தெளிவான கருத்தை வெளியிட்டார்கள்.

சீனப் படையெடுப்பு, எல்லையைத் தாக்குவது மட்டுமல்ல! ஜனநாயக முகாமைத் தாக்குவதாகக் கருதவேண்டும்.

எனவே நாம் திருப்பித் தாக்கி வெற்றிபெற உறுதிகொள்வது ஜனநாயகத்தைப் பாதுகாக்கத்தான்.

சீன நாட்டின் வரலாறு படித்தவர்கள் அறிவார்கள். சீனா எப்போதெல்லாம் வலிவான சர்க்கார் பெற்றிருக்கிறதோ அப்போதெல்லாம் பிறருடைய இடங்களைத் தாக்கிப் பிடிக்கும் நோக்குடன் படையெடுப்பு நடத்தி வந்திருக்கிறது.

இதை உணர்ந்து ஜனநாயக அணி திரள வேண்டும்.

சீனப் படையெடுப்பை எதிர்த்து இந்தியாவை ஆதரிக்கும் எல்லா ஜனநாயக நாடுகளுடனும் நமது சர்க்கார் தொடர்பு கொள்ளவேண்டும்.''

இந்தப் படையெடுப்பு ஜனநாயகத்தைச் சாகடிக்கும் நோக்கத்துடன் புறப்பட்டு வந்திருப்பதாகும் என்கிறார். வலுவான சர்க்கார் அமையும்பொழுதெல்லாம் சீனப் பூதம் இப்படி சீற்றங்கொண்டு முறைகேடான காரியங்களில் ஈடுபடுவது வாடிக்கை என்கிறார்.

இந்தப் பூதத்தை ஆழக் குழி தோண்டிப் புதைக்க, இந்தியாவை ஆதரிக்கும் எல்லா ஜனநாயக நாடுகளுடனும் நமது சர்க்கார் தொடர்பு கொள்ளவேண்டும் என்கிறார். தொடர்பு கொள்வதுமட்டுமல்ல ''உடனடியாக நமது நிலையை விளக்கி ஆதரவு திரட்ட ஒரு நல்லெண்ணத் தூதுக் குழு அனுப்பப்பட வேண்டும்.

அந்தக் குழு ஆயுத உதவி அளிக்கும் ஒரு அணியை அமைக்க வேண்டும். ஜனநாயகத்தைப் பாதுகாக்க நடத்தப்படும் இந்தப் போரிலே ஈடுபட ஜனநாயக நாடுகளிலிருந்தும் தொண்டர்படை திரட்டவேண்டும். இது தவறுமல்ல, இதிலேஇழுக்குமில்லை,'' என்று சூழ்ந்திருக்கும் ஆபத்தை உடனடியாகத் தகர்த்தெறிய சர்க்காருக்கு யோசனை கூறுகிறார் அறிஞர் அண்ணா.

இந்த நேரத்தில் அரசினர்க்கு ஏராளமான பண உதவி தேவை. அதைத் தருணமறிந்து நாட்டு மக்கள் தந்துகொண்டிருக்கிறார்கள். மேலும் எந்தெந்த வகையில் நிதி சேர்க்கலாம் என்பதற்கும் வழி சொன்னார் அறிஞர் அண்ணா.

''போர்ச் செலவுக்காக மக்கள் வாரி வழங்குகிறார்கள். அவர்கள் சாமான்யர்களாக இருந்தாலும் சரி, மேல்மட்டத்திலே இருப்பவர்களாயினும் சரி இது போதாது. மேல்மட்டத்தினர் இன்னும் அதிகமான அளவிலே வழங்கவேண்டும்.

ஓராண்டுக்காகிலும் சிற்றரசர்கள் தாம் பெற்றுவரும் உதவியை நிறுத்தி அதனை யுத்த நிதிக்குத் தரவேண்டும்'' என்று வேண்டுகோள் விடுத்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு கொள்ளைலாபமடிப்பவர்கள் அத்தியாவசியப் பண்டங்களின் விலையை ஏற்றிவிடாதபடி அரசினர் கவனித்துக்கொள்ள வேண்டும். அப்படி யாராவது நடந்துகொண்டால் அவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு—

சீனப் படையெடுப்பை முறியடிக்க தி. மு. கழகத்தின் சார்பில் முழு ஒத்துழைப்பையும் தருவதாக உறுதி சொல்லி தன் உரையை முடித்துக்கொண்டிருக்கிறார் அறிஞர் அண்ணா.

தூய்மையான லட்சோப லட்சம் இதயங்களில் அன்புத் திருவுருவமாக அமைந்திருக்கும் அறிஞர் அண்ணா அவர்கள், மாநிலங்கள் அவையில் அமைச்சர்களுக்கு முன்னால், சீன ஆக்கிரமிப்பை முறியடிக்க ஒத்துழைப்பதாக கழகத்தின் சார்பில் உறுதி கொடுத்துவிட்டார்.

தோழர்களே! இனி அறிஞர் அண்ணா அவர்களின் கட்டளையை செயல்படுத்தக் காத்திருங்கள்.

அழைப்பு இன்று வரலாம்! நாளை வரலாம்! நாளை மறுநாள் கிடைக்கலாம்! எந்த நேரமாயினும் சரி—புறநானூற்று வீரர்களே புறப்பட்டு வரத் தயாராய் இருங்கள்!

அழைப்பு, எல்லைப் போருக்காயினும் சரி, இரத்தம் கொடுப்பதற்காயினும் சரி, வேறு எந்தச் செயலுக்காயினும்சரி அண்ணனின் கட்டளையை நிறைவேற்றி வைப்பது நம் கடமை!

தி. மு. கழகம் எடுத்துக்கொண்ட எந்தச் செயலும், நடத்திய போராட்டமும் வெற்றிக்கொடி நாட்டுவதிலேதான் முடிந்திருக்கிறது.

சீன ஆக்கிரமிப்பை முறியடிக்க தி. மு. கழகம் உறுதியெடுத்துக்கொண்டுவிட்டது.

அந்நியத் துரோகி எவனானாலும் அன்னையின் துயிலுரிவதைப் பார்த்துக்கொண்டிருக்க மாட்டோம்,

அவன் கரத்தை வெட்டுவோம்! கழுத்தை முறிப்போம்!—

அன்னையின் பூமியைக் காப்போம்?

பின் நமது உரிமையைக் கேட்போம்.

— தினகரன்.

புகழ்!

என். வி. கலைமணி

புகழ்! மூன்றெழுத்துச் சொல்! முத்தமிழெனும் கனியிலேயிருந்து வடியும் ஒரு தேன் துளி!

முத்துபோல் பொருளொளி பரப்பும் சத்தானத் தத்துவம்.

தமிழ்ச் சொற்களைத் தரமாகப் பகுத்துப் பாருங்கள். அறிவுப் பசி கொண்டவனுக்கு அவை அறுசுவை விருந்தாகவே அமையும்.

தமிழ் என்றாலே தேன் என்றல்லவா பொருள். பிறகு, இனிமை பயப்பதிலே வியப்பு யாதுளது?

இஃதை அறிந்தன்றோ பாவேந்தர் பாரதிதாசனார், “மங்கை ஒருத்தி தரும் சுகமும், எங்கள் மாத்தமிழுக்கு ஈடில்லை” என்றார்.

கவிஞர் கழறும் இந்தக் கவிதையடிகளின் கருப்பொருள் யாது என்பதைச் சற்று ஆய்வு புரியுங்கள் அதன் உட்பொருளின் தன்மை-பெருமை நமக்கு நன்கு புரியும்!

மங்கை ஒருத்தியின் இன்பம்; மணி முடிகள் பலவற்றை மயானத்திற்கனுப்பியுள்ளன.

சரசவல்லிகளின் சந்தோஷத்திற்காக சாம்ராச்சியங்கள் பல சரிந்த கோட்டைகளாகியுள்ளன.

மாட மாளிகைகள்-கூடகோபுரங்கள் மணல் மேடாகியுள்ளன.

களத்திலே வாளை கைக்கோலாக ஏந்தி, ஆர்த்தெழும் அரிமாவைப்போன்று, சண்டமாருதச் சமர் புரிபவனேயாயினும், கன்னியொருவளின் கடைக்கண் வீச்சுக்கு காலிடறி வீழ்வான்!

வரலாற்றுச் சம்பவங்கள் பல, இன்றும் இவற்றை வரையறுத்து பறையறைவதை, வரலாறுணர்ந்தோர் அறிவர்.

அத்தகைய அரம்பையரின் வனப்பும் பருவ இன்பமும், சக்தியும்கூட எங்கள் மாத்தமிழுக்கு ஈடாகாதாம்! கவிஞர் கூறுகிறார்! ஏன்?

அணங்குகளின் இன்பத்திற்காக அவனியையே அற்பமாக நினைத்த அரசர்களுமிருந்தனரல்லவா?

தரணியினையே தனது காலடிகட்கு தஞ்சம் புகச் செய்யும்தளிர் மேனியாள் தரும் இன்பமேயாயினும், அந்த இன்பமும்கூட, மாத்தமிழுக்கு ஈடிற்றதாம்!

இஃதைவிட, வேறு ஒரு கவிஞராலும் தமிழின் தரத்தை-புகழை-இயம்ப முடியாதல்லவா?

அத்தகைய அழகு தமிழ், அருமைத் தமிழ், நமது தேன் தமிழ்!

அமரகவி பாரதியாரும் இந்த அற்புதத் தமிழின் வியப்பை அறிந்தன்றோ, பாடினார்...

“யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல், இனிதாவதெங்கும் காணோம்” என்று.

இதைவிட மொழி ஆய்வுத் திறன், தமிழுக்குரிய நற்சான்றிதழ், வேறு எவரால் தரமுடியும்.

தமிழின் தரம், தரணிவாழ் மொழியெலாம் கண்டு வியக்கக் கூடியது.

தமிழின் திறம், பிறமொழிகள் என்னதான் படைபலம் கொண்டு தாக்கினாலும், அந்தத்தடைகளைத் தகர்த்தெறியும் வீறுநடையுடையது.

தமிழின் தொன்மை, நயம், சொல்லுணர்வு, இனிமை, மரபு, கருத்தாழம், வரலாறு இவற்றை காலத்தாலும் அழிக்க முடியவில்லை.

ஆடிக்காற்றுச் சருகுகள்போல், அவன் வாழ்மொழிகள் சில காலப் புயலிலே கடுகிப் பறந்ததை வரலாறறியும்.

தமிழ் ஒன்றுதான், ஆயிரமாயிரம் ஆண்டுகளாக, தன்மானத்துடன், தலை நிமிர்ந்து, காலப் புயலாலும் அசைக்க முடியாத உறுதியோடு, இன்றும் பவனி வருகிறது.

இஃதை அறிந்தோ என்னவோ, அருணகிரிநாதர் “கனத்த செந்தமிழ்” என்று அறைந்தார் போலும்!

தமிழை ஒரு எடைத் தட்டிலே நிறுத்தி, தரணிவாழ் மொழிகளனைத்தினையும் கொண்டுவந்து மறு தட்டிலே நிறுத்தி, “செங்கைத் துலாக்கோலால்” எடையிட்டுப் பார்க்கின், தமிழ்தான் கனத்து நிற்கும் என்பது அருணகிரியின் ஆய்வு!

இத்தகைய பேறுபெற்றக் கன்னித் தமிழை, மாட்டுக்குப் பல்லை பிடித்துப் பார்ப்பதைப்போல, பார்க்க முடியுமா?

முடியாத செயல்தான்! ஆனால், நமது தாய்மொழியாம் தமிழின் அருமையை — பெருமையை — பொலிவை - சிறப்பை - தரத்தை தத்துவத்தை — கருத்தாழத்தை - சொல் நயத்தை—தொன்மையை ஓரளவாவது பிறமொழிக் கருத்துக்களோடு ஒப்புவமை நோக்கி ஆய்வு புரிந்துக்கொள்ள வேண்டாமா?

புரிந்து கொண்டாலன்றோ; தமிழனாய்ப் பிறவியெடுத்ததின்சீரியப் புகழை நாம் பெற்றவர்களாவோம்.

எனவேதான், தமிழெனும் மொழிச் சோலையிலே நாம் புக வேண்டுமென்று புகல்கிறோம்.

தமிழ்ச் சோலையிலே பற்பல நறுமண மலர்கள் பூத்து, பூச்சிரிப்பைக் காட்டி, நம்மையும் நம்முடன் வருவோரையும் மணக்க வைக்கும்-மயங்க வைக்கும் இயற்கையின் எழிலைக் காட்டி வரவேற்கிறது.

ஒவ்வொரு மலரும் ஒவ்வொரு மணத்தைத் தந்து நம்மை அறை கூவி அழைக்கிறது.

தமிழ் என்றே சொல்ல மூன்றெழுத்து மகுடம் புனைந்த மொழி மன்னிதான்!

மன்னர்களால் போற்றப்படும் “கொன்றை” மலர்போல், தமிழ், மன்னர்களாலே வளர்த்துப் போற்றப்பட்ட மலராகும்.

‘வாகை’ மலரை வெற்றிக்குச் சின்னமாக அரச பரம்பரை எவ்வாறணிந்து போற்றியதோ, அஃதேபோன்று மன்னவர்கள் தமிழையும் போற்றிப் புகழ்ந்து காத்துப்பேணி வந்தனர்.

தமிழ், செயங்கொண்டான் என்ற பெரும்புலவனிடம் பரணியாகப் பிறந்ததால்தான், தமிழ்ப் பாடல் ஒவ்வொன்றுக்கும் பொன் தேங்காயைப் பரிசாகக் கொடுத்தான், குலோத்துங்க மன்னன் என்ற சோழ அரசன்.

இஃது மன்னர்களிடம் ‘தமிழ்’ பெற்ற பெரும் பேறன்றோ!

புலவர்கள் பலர், தமிழின் தரத்தைத் தனது அறிவுடன் இணைத்து பல கிராமங்களையே பரிசாகப் பெற்றனர்.

களம் காணத் துடித்தக் காவலர் சிலர் கன்னித் தமிழ் பயின்ற புலவர்களின் பாடலைக் கேட்டு, களத்தையே காண மறந்தனர்! இதனால் மக்கள் உயிர் காக்கப்பட்டன!

அரியணை துறந்தபின்தான், ‘இளங்கோ’ தமிழ்த் தாய்க்கு ‘சிலம்பினை’ச் சூட்டினார்

கம்பர், தமிழோடு சரிசமமாக நின்று சிரித்து விளையாடிப் பழகியவர்! கம்பராமாயணம் இதற்கு சாட்சியாக விளங்குகிறது

தரணிவாழ் மாந்தர்களின் வாழ்க்கையைப் பல கோணங்களில் நின்று தொலைநோக்கியெனும் ஆய்வுக் கண்ணாடியால் உற்றுநோக்கி, அறிவெனும் தர்மா மீட்டரைக்கொண்டு அளந்து பார்த்து, குறள் எனும் மருந்தைக் குவலய மக்கட்குத் தந்தது வள்ளுவரின் தமிழ் அறிவின் திறமன்றோ!

வையத்திற்கு முப்பாலை ஈந்து வான்புகழ் கொண்டல்லவா இயங்குகிறது தமிழ்!

கூழுக்குப் பாடிய ஔவை; பொன்னுக்குப் பாடிய கம்பன்; அவனுக்கு அறநெறி வகுத்த வள்ளுவர்; அருளுக்குக்கவிதையார்த்த இராமலிங்கர்; நாட்டு விடுதலைக்குப் பாடிய பாரதி; சமுதாயப் புரட்சிக்கு ‘பா’ புனைந்த பாரதிதாசன், இவர்களனைவரும் தமிழால் வாழ்வு பெற்றார்கள்; புகழ் ஈட்டினார்கள்; என்பதை மறுக்கவோ-மறைக்கவோ -மறக்கவோ முடியாத செயலன்றோ!

எனவே, தமிழ், தமிழக சாம்ராச்சியத்தை பல்லாயிரம் ஆண்டுகளாகத் தன் அழகு-அன்பு-காதல் -நட்பு-புகழ்-காலம்-சீலம் என்ற மூன்றெழுத்துக்களால்அரசோச்சி வருவதை அவனியறியும்.

புகழை இசை என்றும் புகலலாம்! இசையை புகழென்றும் இயம்பலாம்.

அரிய செயல் உரிய முறையில் ஆற்றப்படின், சீரும் சிறப்பும் பெற்று சீரிய வகையில் இசை ஒளி வீசி மிளிரும்.

புகழைப் பெற்றவன் புவனியில் விழிபோலப் புகழப்படுவான்.

இசையைப் பெறாதவன் இழிநிலைக்கு இலக்காவான்.

அரிது அரிது மானிடராய்ப் பிறப்பதரிது என்று அறையப்படும் மனிதப் பிறவிக்கு, புகழ் அருமைமிக்கதாகுமன்றோ?

பிறவியில் உயர்ந்தவன் மனிதன்; பிறவியில் தாழ்ந்தவை பிராணிகள்.

புகழ் வேண்டி நிற்பவனிடம் சிறப்பான பண்புகள் அமைய வேண்டும்.

(10-ம் பக்கம் பார்க்க)

கூலிப்படைமீது கண் வையுங்கள இதோ சில ஆதாரம் !

கேரளத்திலிருந்து வெளிவரும் கம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகையான விஸ்வகேரளம் என்ற பத்திரிகை சீன ஆக்கிரமிப்பை ஆதரிக்கும் வகையில் பல செய்திகளை அன்றாடம் வெளியிட்டு வந்ததாம்.

இப்படி இந்தியாவிற்கு விரோதமாகச் செய்தி வெளியிடும் பத்திரிகை மீது ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாதென்று கேரள போலீஸ் அமைச்சர் வினவியபோது, “செய்த தவறை உணர்வதாகவும் தங்களை மன்னிக்குமாறும் விஸ்வகேரளம் கேட்டுக் கொண்டதாம்.

மன்னிப்பா? மானமுள்ள கம்யூனிஸ்டுகள் மன்னிப்புக் கேட்க மாட்டார்களே! என்கிறீர்களா? மானத்தைத்தான் மாஸ்கோவுக்கு விலை கூறிவிட்டார்களே! சீனாவிற்கு சீதனமாய்க் கொடுத்து விட்டார்களே!

இந்தியாவில் செங்கொடி பிடித்துத் திரிவதெல்லாம்! அடிமை உருவம்! கூலிச் சதை! மானம் போன உயிர்! ஐயகோ! ஐயகோ!

ஆலப்புழை நகரசபைக் கூட்டத்தில் சீன ஆக்கிரமிப்பைக் கண்டிக்கும் விதத்தில் “ஆக்கிரமிப்பு வெறிகொண்ட கம்யூனிஸ்ட் சீனா” என்ற வார்த்தையை தீர்மானத்தில் சேர்த்துக் கொள்ளும்படி திருத்தம்கொண்டு வந்தார்களாம் எதிர்க் கட்சியினரான காங்கிரசார்!

ஆனால், அந்தத் திருத்தத்தை நகரசபைத் தலைவர் நிராகரித்து விட்டாராம். தலைவர் யார் தெரியுமா? முன்னாள் கேரள கம்யூனிஸ்ட் மந்திரி—டி. வி. தாமஸ்!

‘ஆக்கிரமிப்பு வெறி’ என்ற வார்த்தையைக்கூட சீனாமீது பிரயோகிக்க கம்யூனிஸ்டுகளுக்கு மனம் ஒப்பவில்லை! அவ்வளவு எஜமான விசுவாசம்! இவர்களைக் கண்காணிக்கக்கூடாதாம்! கைது செய்வதும் தகாதாம்! இங்குள்ள கம்யூனிஸ்டுகள் இரைச்சல் போடுகிறார்கள்!

தமிழ்த்தாயே! உன் மணி வயிற்றுப் பிள்ளைகளா இந்த மாபாவிகள்? ஐயகோ! ஐயகோ!

வாரிக் கொடுக்கும் வள்ளல் — பாரி வழி வந்த கலைஞர்

இல்லை என்று கைவிரித்துப் பார்த்ததில்லை இவர் ஏழை துயர் துடைக்கச் சளைத்ததில்லை

வானத்தில் சிதறிக் கிடக்கும் கோடிக்கணக்கான நட்சத்திரங்களில் ஒன்றே ஒன்றுக்குத்தான் சிறப்புண்டு. இருளகற்றிப் பிரகாசிக்கும் விடிவெள்ளிக்குத்தான் பெருமையுண்டு.

நண்பர்களுடன் உள்ளம் திறந்த வெள்ளைச் சிரிப்பு

சிப்பியில் விளையும் எல்லா முத்துக்களும் சிறந்து விடுவதில்லை. ஒன்றிரண்டு மட்டுமே விலைக்கு அடங்காமல், மதிப்புக்கு நிற்காமல் முற்றி விளைந்து முழுமை பெறுகிறது.

வைரத்தின் வரிசையிலும் அப்படித்தான்.

நம்மில் நடமாடும் கோடிக்கணக்கான உயிர்களில் விடிவெள்ளியாக, முற்றி விளைந்த முத்தாக, வைரமாக வாழ்ந்து காட்டுகிறவர்கள் எண்ணிக்கை அளவில் இல்லை. சுட்டிக்காட்ட மட்டுமே அபூர்வமாகச் சிலர் உண்டு.

அவர்களின் செயல்களைத்தான் வரலாறு தன் இதயத்தில் வடித்து வைத்துக்கொண்டு, சந்ததிகளுக்குக் காட்டிப் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறது.

பற்றிப் படரக் கொம்பில்லாமல் துவண்டு கொண்டிருந்த கொடிக்குத் தேர்கொடுத்த பாரி, குளிரால் நடுங்கிக்கொண்டிருந்தமயிலுக்குத்துகில் போர்த்திய பேகன், பொருள் இல்லாத நேரத்திலும் இல்லையெனச் சொல்லாமல் விலையுள்ள தன் தலையைக்கொடுத்துப் பொருள் பெற்றுச் செல்லும்படி புலவரிடம் சொன்ன — வறுமையிலும் செம்மையாக நடந்து கொண்ட குமணன் இவர்களெல்லாம் வள்ளல் தன்மைக்கு, கொடையின் சிறப்புக்கு வழிகாட்டியாய் அமைந்தனர்.

இவர்களின் அடிச்சுவட்டில் எல்லோருடைய பாதங்களும் பதிந்துவிடவில்லை.

கலை உலகைப் பொறுத்தவரை தனக்கென எதுவும் சேமித்துக் கொள்ளாமல் வந்ததையெல்லாம் ஏழைகளின் துயர் துடைக்க, பிறர்கேட்காமலேயே வாரி வழங்கி, வழிகாட்டியவர் **கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்.**

கொடைத் திறனுக்கு அவர் கோபுரம் அமைத்துவிட்டுப் போனார். அந்தக் கோபுரத்தின் கலசமாக இன்று விளங்குபவர் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன்.

எங்கே துயர் இருக்கிறதோ! அங்கே இவர் துணையிருப்பார்— துயர் துடைப்பார்!

மக்களைப் பற்றி ஒரு அரசுக்கு இருக்க வேண்டிய கவலை தனிப்பட்ட இவர் உள்ளத்தில் எப்பொழுதும் குடைந்துகொண்டே இருக்கும்.

சென்னையைச் சுற்றியுள்ள சேரிகளை எப்பொழுது அகற்றுவது, குடிசைகள் இருக்குமிடத்தில் நல்ல குடில்கள்

அள்ளிக் கொடுத்த கலைவாணருடன் வாரிக் கொடுக்கும் புரட்சி நடிகர்.

அமைத்துக் கொடுப்பதெப்போது. சோகம் கப்பியுள்ள முகங்களில் மகிழ்ச்சி கூத்தாடும் நிலை எந்தக் காலத்தில் வரும் என்ற சிந்தனை அவர் மேடையில் பேசும்போது மட்டுமல்ல, தனிமையில் இருக்கும் பொழுதுகூட இதே சிந்தனையில் அவர் எண்ணம் இழுக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

மழை பெய்து கொண்டிருக்கிறது. படப்பிடிப்பிற்காக எம். ஜி. ஆர். காரில் சென்றுகொண்டிருக்கிறார். கொட்டும் மழை மேனியில் வழிய, ரிக்ஷா ஓட்டிக்கொண்டு வருகிறான் ஒரு தொழிலாளி. நாம் காரில் பாதுகாப்பாகச் செல்லுகிறோம். அவன் மழையில் நனைந்துகொண்டு வருகிறான். காரில் செல்லும் வசதி அவனுக்கு ஏற்படாவிட்டாலும் மழையிலிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள ஒரு குடை வேண்டாமா? இந்தச் சின்ன உதவியைக்கூட அவனுக்கு நம்மால் செய்து கொடுக்க இயலாதா?

அவனுக்கு மட்டும் கொடுத்தால் போதாது? அவன்போன்ற தொழிலாளர்கள் அத்தனை பேரும் இதனால் பயன் பெற வேண்டும்—இப்படி எண்ணினார் எம். ஜி. ஆர்.

(9–ம் பக்கம் பார்க்க)

மழைக்கோட்டை அறிஞர் அண்ணா அவர்களிடம் கொடுத்து ரிக்ஷா தொழிலாளர்களுக்கு வழங்கும்படி கேட்டுக்கொள்ளுகிறார்.

காமராசர் செய்த புண்ணியம்...

சிறை சென்ற நாங்கள் இன்று காலையிலே விடுதலை செய்யப் பட்டிருந்தால் இங்கு நடைபெறும் இந்தப் பாராட்டுக் கூட்டம் அரசிற்கு அறிவுரை கூறவேண்டிய கூட்டமாக இருந்திருக்கும்.

மதுரையிலே பொற்செழியனைப் பலி கொடுத்தோம். அந்த வேதனை தீருமுன் அருமைத் தோழர்—தீரர்—மாநகராட்சி மன்ற உறுப்பினர் ஏறுபோன்ற தோற்றம் கொண்ட இளைஞர் ஒருவரையும் இழந்தோம்.

நாம் இந்த நிகழ்ச்சிகளை, நாட்டிற்குத் தற்போது வந்திருக்கும் எல்லைப்பிரச்னையை முன்னிட்டு; மறந்திருக்கிறோம். காமராசர் செய்த புண்ணியமோ என்னவோ எல்லைப் பிரச்னை வந்து விட்டது.

இரண்டு வீரர்களை நாம் இழந்த பிறகும் அண்ணா அவர்கள், நாட்டிற்கு வந்திருக்கிற நெருக்கடியை உணர்ந்து இந்த அரசியலாரை மன்னித்து விட்டதால் இன்றைய நிலைமாறியிருக்கிறது.

இங்கு இன்று நடைபெறுகின்ற பாராட்டு, சிறை மீண்டவர்களுக்கு அன்பை எடுத்துக் காட்டுவது. தியாகி சுப்பிரமணியமும், பொற்செழியனும் சிறையிலே அடைபட்டுக்குருதி கொட்டியவர்களும், அண்ணனை, தம்பியை மகனை, மனைவியை, தாயை—தந்தையை இழந்தார்களே கழகத் தோழர்கள், அவர்கள் தான் தியாகிகள். அவர்கள் எங்களை விடப் பெரிய தியாகம் செய்தவர்கள்.

விடுதலை பெற்ற என்னைப் பார்த்து நான் தியாகம் செய்ததாக எண்ணிக் கொள்ளவில்லை. தாய் தடுத்ததையும்தள்ளிவிட்டு, தந்தை எதிர்த்ததையும் புறக்கணித்து விட்டு—ஒதுக்கிவிட்டுச் சிறை சென்றோமே அது ஆச்சரியமல்ல; திடீரென எங்களை விடுதலை செய்தார்களே அதுவும் ஆச்சரியம் அல்ல; நாங்கள் உயிரோடு திரும்பியது ஒருவேளை ஆச்சரியமாக இருக்கலாம்.

ஏகாதிபத்ய ஆசை கொண்டு அலைவதாலும், மண்ணாசை கொண்டு திரிவதாலும்தான் அண்ணாவும் நாமும் சீன ஆக்கிரமிப்பைக் கண்டிக்கிறோம். சீனர்களுக்குக் கூலிகளாக இருக்கிறார்களே அவர்களது கருத்து எங்கே; காமராசர்கூட இந்த ஆக்கிரமிப்பைக்கண்டிக்க அருகதையற்றவராகத்தான் இருந்தார். இந்த ஆபத்தை அறியாது—ஆவேசம் ஏற்படாமல்தான் இருந்தார்கள்.

இந்தச் சீனப்பிரச்சினை மட்டும் அல்ல! ஒரு சமுதாயம், ஒரு இனம் ஆக்கிரமிக்கப் படுமேயானால் தி. மு. கழகம் அதை எதிர்க்கும். பர்மாவிலேயும், மலேயாவிலேயும் ஆக்கிரமிப்பு யார் நடத்தினாலும் தி. மு. கழகம் அதை எதிர்க்கும்,

இரஷ்யா ஆக்கிரமிப்புநடத்தினாலும்சரி; அமெரிக்கா ஆக்கிரமிப்பு நடத்தினாலும் சரி தி. மு. கழகம் அதைக் கண்டிக்கும். எந்த இடத்தில் மக்களின் உரிமை நசுக்கப் பட்டாலும் தி. மு. கழகம் அதை எதிர்க்கும்.

இதை சில அரசியல் அப்பாவிகள்; நரித்தனம் கொண்டவர்கள் சந்தர்ப்பவாதம் என்கிறார்கள்.

தி. மு. கழகம் சந்தர்ப்ப வாதத்தை அறியாது. நியாயத்தையே எடுத்துச் சொல்லும்.

இன்னும் 7 வருடம் சென்றால் நிலைமாறினால் எங்களுக்கு அப்போது தெரியும் என்று கூறுவார்கள் இந்தக் கம்யூனிஸ்டுகள். அரசியலிலே சொல்வதானால் ஆண் பெண் விபச்சாரம் நடத்துவார்கள். இந்தக் கம்யூனிஸ்டுகளை சென்னையில் மட்டுமின்றி, பொதுமக்கள் அனைவருமே ஒதுக்கி வைத்து விட்டார்கள்.

பம்பாய், டெல்லி போன்ற நகரங்களிலே இவர்களுக்கு ஏற்பட்ட நிகழ்ச்சி வருந்தத் தக்கதுதான் என்றாலும், அவர்களுக்கு இது ஒரு பாடமாக இருக்கும். பொதுமக்களை ஏமாற்றி இவர்கள் மக்கள் கவனத்தைத் திசை திருப்ப எண்ணுகிறார்கள்.

தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் சீன ஆக்ரமிப்பை அழிக்கத் தயாராக இருக்க வேண்டும். அண்ணா சொன்னதை நினைவிற் கொண்டு செயல்படவேண்டும். சீன ஆக்கிரமிப்பை ஒழிப்போம் ஜனநாயகத்தைக் காப்பாற்றுவோம்.

எரிக்கப்படும் தங்கம் ஜொலிக்கத்தான் செய்யும்!

அறுக்கப்படும் வைரம் பளபளக்கத்தான் செய்யும்!!

தட்டப்படுகின்ற முரசம் ஒலிக்கத்தான் செய்யும்!!!

"அடிக்கிற பந்து எழும்பத்தான் செய்யும்! எரிக்கப்படும் தங்கம் ஜொலிக்கத்தான் செய்யும்; தட்டப்படுகின்ற முரசம் ஒலிக்கத்தான் செய்யும்! அறுக்கப்படும் வைரம் பளபளக்கத்தான் செய்யும். அதே போல் தாக்கப்படுகின்ற தி. மு. கழகமும் வளரத்தான் செய்யும்".

இதுவரை அறப்போரில் ஈடுபட்ட நாம் தற்போது சீனரை விரட்டும் மறப்போரில் ஈடுபட்டிருக்கிறோம்.

அறப்போர் என்பது தன்னைத்தானே வருத்திக்கொண்டு பிறருக்குத் துன்பம் ஏற்படாத வகையில் பகையாளியை நண்பனைப்போல் எண்ணி, அவனுக்கு யாதொரு தீங்கும் ஏற்படாது செயல் படுவது.

சீனா 37 இலட்சம் சதுரமைல் பரப்பளவு கொண்டது. 66 கோடி மக்கள் அங்கு வாழ்கிறார்கள். இந்தியத் துணைக் கண்டம் 15 இலட்சம் சதுர மைல் அளவு கொண்டது. சராசரியாக சீனாவில் சதுர மைலுக்கு 181 பேர் வசிக்கிறார்கள். இங்கு 139 பேர் வாழ்கிறார்கள். சராசரியாக சதுர மைல் கணக்கில் பார்த்தாலும் கூட அவர்கள் நம்மைவிடக் குறைவாகவே இருக்கிறார்கள்.

இந்தச் சூழ்நிலையில் சீனா ஆக்கிரமிப்புச் செய்கிறதென்றால். அது அங்கு வாழ்கின்ற மக்களைக் காப்பாற்ற, உற்பத்தி செய்ய, தங்கத்தைத்தோண்டி எடுக்கவோ, அல்லது தொழில் நிலையங்களை அமைக்கவோ அல்ல. இப்போது சீனா ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் பகுதி முழுவதும் மலைக்காடுகள், பனிமலைப் பகுதிகள். ஆகையினால் நாடு பிடிக்கும் ஆசையில், ஏகாதிபத்திய வெறிகொண்டே சீனா நம்மீது ஆக்கிரமிப்புச் செய்து வருகிறது, தனது கொள்கையைப் பரப்ப போர்க்களம் அமைத்திருக்கிறது.

நாம் நமது விடுதலை உணர்வுகளை கொள்கைகளைத் தள்ளி வைத்துவிட்டு சீனா ஆக்கிரமிப்பை எதிர்க்கிறோம். ஆனால் நம்மை இழித்தும் பழித்தும் பேசி வருகிற அகில உலகக் கம்யூனிஸ்டுகள் 12 நாட்களாக இந்தப் பிரச்சினையில் சீனாவை ஆதரிப்பதா? இது ஆக்கிரமிப்பா? அல்லது அன்பு வழி நடப்பா? சீனாக்காரன வருவது நன்மைக்கா? தீமைக்கா? என விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

விவாதித்து ஒட்டு எடுக்க வேண்டிய முடிவா இது? கை தூக்கித் தீர்மானம் நிறைவேற்ற வேண்டிய நேரமா இது?

நீ இப்படி விவாதித்தாய் என்றால் இங்கே ஐந்தாம்படை இருக்கிறது என்றுதானே அர்த்தம். கை தூக்கி எடுக்க வேண்டிய முடிவா? பிரச்சினையா இது? ஆக்கிரமிப்பு நடைபெறும் இந்நேரத்தில் தி. மு. கழகம் திராவிடநாடு பற்றிவலியுறுத்த வேண்டும் என்றுகம்யூனிஸ்ட்கட்சி கூறுவதிலிருந்து, இந்திய அரசின் முயற்சிவலிவிழக்கவேண்டும் என்பதுதானே அதன் உள் நோக்கம்.

தி.மு.கழகம் தனது கொள்கையை தள்ளிவைத்துவிட்டு சீன ஆக்கிரமிப்பைஎதிர்க்கிறதென்றால், அதை அடியோடு விட்டுவிட்டது என்றுபொருளல்ல.

போருக்குச் செல்லுகின்ற ஒருவன்; படைவீரன் வீட்டையும் மனைவியையும் விட்டுவிட்டுச் செல்லுகிறான் என்றுதான் பொருளே தவிர, வீட்டையும், மனைவியையும் மறந்து விட்டான் என்று பொருளல்ல. அதிலே வெற்றி பெற்றால் தான் வீடு கிடைக்கும். மனைவியைப் பார்க்க முடியும்.

அது முடிந்த பின் இதை நினைப்போம். வீடு விட்டுச் செல்லும் வீரன் திரும்பாமல் இருக்கமாட்டான். அதுபோல் நாமும் நினைப்போம்.

தனிப்பட்ட முறையிலே எனக்குச் சிலபல உரிமைகள் உண்டு. தொகுதியைப் பார்க்கும் வகையிலே நான் திருவல்லிக்கேணித் தொகுதியைச் சார்ந்தவன் என்பதிலே எனக்குச் சிலபல உரிமைகள் உண்டு. மொழியைப் பொறுத்த வகையிலே, நான் தமிழன் என்பதிலேஎனக்குச் சிலபலஉரிமைகள் உண்டு. இனத்தைப் பொறுத்தவரையிலே, திராவிடன் என்பதிலே உரிமைகள் உண்டு. நான்இந்தியத்துணைக் கண்டத்தைச்சார்ந்தவன்என்பதிலே, எனக்குச் சிலபல உரிமைகள் உண்டு. அந்த உரிமைகளுள் ஒன்றுதான் சீனாக்காரனை விரட்டியடிப்பது.

நாம் சீன ஆக்கிரமிப்பை இப்பொழுதுமட்டும் எதிர்க்கவில்லை. நாம்கூட்டிய பொதுக்குழு, செயற்குழுக் கூட்டங்களிலும் மாநாடுகளிலும் முன்பே சீன ஆக்கிரமிப்பைக் கண்டித்திருக்கிறோம்.

நமது கொள்கையை ஒரே ஒரு கட்சியினர்தான் எதிர்க்கிறார்கள். அவர்கள் நம்மை எதிர்ப்பதின் நோக்கம் என்ன? அரசியல் கட்சிக்கு ஏன் இந்த மறைமுகம்? இதனால் ஏற்படும் விளைவு என்ன?

நமது முயற்சிகள் ஆண்மையானது. உலகத்தில் எந்த இடத்தில் ஆதிக்கம்—அக்கிரமம் நடந்தாலும் அதை நாம் எதிர்க்கிறோம். எந்த இடத்தில் அநீதி தலை தூக்கினாலும் அதைக் கண்டிக்க நாம் கடமைப் பட்டிருக்கிறோம்.

இவ்வளவு தூரம் ஆக்கிரமிப்புச் செய்துவிட்ட சீனாவை உடனே, தன்னந் தனியாக விரட்டியடிப்பதென்பது இயலாது. உலக நாடுகளின் ஆதரவைப் பெற்று விரட்டினால் தான் சீனாவை, அங்குலம், அங்குலமாக வெளியேற்ற முடியும். காங்கோ பிரச்சினையின் போது, காங்கோவுக்கு நமது வீரர்களை அனுப்பியது போல, உலகநாடுகள் இந்த சீன ஆக்கிரமிப்பை, ரஷ்யாவிடமிருந்து ஆயுதம் பெற்று வருகின்ற, சீனாவை விரட்ட இந்தியத் துணைக்கண்டத்திற்கு உதவ வேண்டும்.

இந்திய எல்லையிலிருந்து சீனரை விரட்டியடிக்கவேண்டுமானால் நாமெல்லாம் போர்த்திறன் படைத்திருக்க வேண்டும். சீனர்கள் முழுப்பயிற்சி பெற்றிருக்கிறார்கள். அப்படிப் பட்ட சீனா நம்மை எதிர்க்கிறது. இந்த நாட்டில் உள்ள இளைஞர்கள் அனைவருக்கும் போர்ப் பயிற்சி அளிக்க வேண்டும்.

தி. மு. கழகம் சீனா ஆக்கிரமிப்பை முறியடிக்க முழு முயற்சியையும் தரும்; பொருள் தரும்; இரத்தம் தரும். குத்து பிராய்க் கிடக்கும் இராணுவ வீரர்களுக்குக் குருதியைக் கொடையாக வழங்குவோம்.

நாம் வீரம் மிக்கவர்கள். நமது வீரத்தை நாம் பயன் படுத்தவில்லை. அதற்கு இப்போதுதான் வேலை வந்திருக்கிறது.

வீட்டிலே இருந்த கணவன் போரிலே இறந்து விட்டதும், பால் மணம் மாறாப் பாலகனையும் "கையிலே வேல் பிடி மகனே"- எனக் கொடுத்து போர்க்களத்திற்கு அனுப்பி வைத்த தாய்க்குலமே நமது நாட்டுத் தாய்க்குலம்.

சீனா இந்தியாவைக் கவர சூழ்ச்சி செய்கிறது; வஞ்சகம் புரிகிறது. வீரத்தை சூழ்ச்சியால் - வஞ்சகத்தால் வெல்ல முடியாது.

இந்தச் சீன ஆக்கிரமிப்பை அழித்து ஒழிப்பது நமது கடமையாகக் கருத வேண்டும்.

விடுதலை பெற்ற தென்னரசுக்கு மதுரையில் வரவேற்பு

திருச்சி மத்திய சிறையிலிருந்து திடீரென்று விடுதலை செய்யப்பட்ட இராமநாதபுர மாவட்டச் செயலாளர் எஸ். எஸ். தென்னரசு, மதுரை மாவட்டச் செயலாளர் பி. எஸ். மணியம், பி. ஏ. பி. எல் மற்றும் வழக்கறிஞர்கள் காவேரி மணியம், கு. திருப்பதி முதலானோர் 11-11-62 அன்று இரவு 7-30 மணியளவில் மதுரை வந்து சேர்ந்தனர்.

தோழர்களின் விடுதலையை வானொலி மூலம் கேட்டறிந்த மதுரை நகரத் தோழர்கள், ஆயிரக்கணக்கில் மலர் மாலைகளுடனும் கைத்தறி ஆடைகளுடனும் இரயில் நிலையத்தில் திரளாக வந்து வரவேற்றனர்.

கம்யூனிஸ்டுகளின் ஆலமரத்தடி ஆருடம்

கடந்த 26-ந் தேதியன்று விடுதலையடைந்த எனக்கு விடுதலை பெற்ற உணர்வே இல்லை என்று சென்னைக் கடற்கரையிலே நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்திலே கூறினேன். காரணம் சென்னைச் சிறைச் சாலையிலே நாவலரும், மதியழகனும், மதுரைச் சிறைச் சாலையிலே பேராசிரியரும் அடைபட்டுக் கிடந்தார்கள். இதை நான் பல இடங்களிலே பேசும்போது குறிப்பிட்டேன். மதுரையிலே நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசும்போது இதுமிக வேதனையாக இருக்கிறது என்று கூறினேன்.

ஆனால் நான் பேசிய மறுநாள் அறப்போரில் ஈடுபட்டுச் சிறை சென்ற கழகத் தலைவர்களும், கழக முன்னணி வீரர்களும் விடுதலை செய்யப்பட்டனர் என்ற செய்தியைப் பத்திரிகையிலே பார்த்தேன்.

வடகிழக்கு எல்லையிலே பயங்கரமான ஆக்கிரமிப்பை கம்யூனிஸ்ட் சீனா ஏற்படுத்தியிருக்கிறது. இதை; இந்த ஆக்கிரமிப்பை வன்மையாக எதிர்க்கும் மாபெரும் இயக்கம் தி. மு. கழகம்தான். தூய்மையான இயக்கம்; சீன ஆக்கிரமிப்பிற்கு தி. மு. கழகத்தினுடைய ஒத்துழைப்புக் கிடைக்கிறது என்று தெரிந்ததும், கழகத்தினுடைய கொள்கையை அரசு உணர்ந்ததோ, மக்கள் உணர்த்தினார்களோ திடீர் என விடுதலை செய்திருக்கிறார்கள்.

அண்மையில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சி ஊர்வலத்திலே "கிடைக்காது கிடைக்காது; திராவிட நாடு கிடைக்காது!"—என முழக்கியிருக்கிறார்கள்.

திராவிட நாடு கிடைக்காது—என்று சொல்ல இவர்கள் யார்? இவர்கள் அரசியல் கட்சி நடத்துகிறார்களா? அல்லது ஆலமரத்தடி ஆருடம் சொல்லுகிறார்களா?

ஏதோ; அண்ணாவும், நாவலரும், பேராசிரியரும், மதியழகனும், கழகத் தலைவர்களும் இவர்களிடம்போய் திராவிட நாடு கொடு' என்று கேட்டது போல, இவர்கள் திராவிட நாட்டைக் கையிலே வைத்துக் கொண்டிருப்பவர்கள் போலத் தர முடியாது; தர முடியாது" என்று கூறியிருக்கிறார்கள். மக்களை சீனப் பிரச்சினையிலிருந்து திசை திருப்ப அந்தக் கட்சி, தி.மு. கழகத்தைக் சாடுகிறது.

கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாடு நடைபெற்றபோது கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரும், சட்டமன்ற கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினருமான கல்யாண சுந்தரம் முழக்கினார். "தி. மு. கழகத்திற்கு சுதந்திரத்தின் மீது அக்கறையிருந்தால் இதுதானே நேரம்! ஏன் பேசாதிருக்கிறீர்கள்?"—என்று.

இந்த அருமையான யோசனையைக்கூறிய அவருக்கு என்ன பரிசு கொடுப்பதென்றே தெரியவில்லை. காரணம் "துரோகிகளுக்குப் பரிசு கொடுத்து நமக்குப் பழக்கமில்லை" அப்படிப்பட்ட அநாகரிகப்பழக்கம் கொண்டது தி. மு. கழகமல்ல! அப்படிப்பட்ட செயலைக் கற்பிக்கும் ஆசானும் நமது ஆசானில்லை.

அந்த மாநாட்டுக் கூட்டத்திலே பேசிய பிரபல வழக்கறிஞரும், கம்யூனிஸ்ட் தலைவர்களில் ஒருவருமான மோகன் குமாரமங்கலம் "தேசீய பாதுகாப்புக் குழுவில் கம்யூனிஸ்ட்கட்சிக்கு இடம் இல்லாவிட்டால் உற்பத்திப் பொருள்களின் வளர்ச்சி தடைப்படும்; நெருக்கடியான நிலைமை ஏற்படும்"—என்று சவால் விட்டிருக்கிறார்.

யார்; எந்தச் சவால் விட்டாலும், அந்தக் குழுவிலே யாரைச் சேர்த்தாலும், சேர்க்காவிட்டாலும் தி. மு. கழகத்தை மீறி எதையும் செய்ய முடியாது என்பதை நாடறியும்.

எவ்வளவு நெருக்கடியான நிலைமை இருந்தபோதும் தி. மு. கழகம் தன்னுடைய விடுதலைக் கொள்கையைத் தள்ளி வைத்து விட்டு, வலியுறுத்தி வாக்களித்து விட்டு, சீன ஆக்கிரமிப்பை முழுமூச்சோடு எதிர்த்து நிற்கிறது.

யார் கழகத்தின் மீது களங்கம் கற்பித்தாலும், மக்கள் அதை நம்பாது சீன ஆக்கிரமிப்பை முறியடிக்க, நாவலருக்கும், மதியழகனுக்கும், பேராசிரியருக்கும் நடைபெறும் இந்தப் பாராட்டுக் கூட்டத்திலே, சூளுரை எடுத்துக் கொள்வோம்.

கம்யூனிஸ்டு கட்சி கடையழிந்துவிட்டது

பணம் விழுங்கும் பாம்புகள்! சமுதாய விரோதிகள்!!

குறை கூறினல் வெட்டரிவாள் தூக்கிவரும் வேங்கைகள்!

இதை என்னல் சகிக்க முடியவில்லை விலகுகிறேன்!

கம்யூனிஸ்டுக் கட்சியின் மிகப்பெரும் தலைவர்களில் ஒருவராக மதிக்கப்பட்டவரும், பிரசித்திபெற்ற மராட்டியக் கவிஞரும் கவுன்சில் உறுப்பினருமான ஜனப், உமர்ஷேக் என்பவர், மராட்டிய மாநிலக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. ஸர்தேசாய் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு குற்றஞ் சுமத்தியுள்ளார். இந்தக் கடிதத்தில் அடங்கியுள்ள முழு விபரங்களையும் மராட்டியப் பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன.

"கடிதம்"

"கம்யூனிஸ்டுக் கட்சியில் ஒழுக்கம், நாணயம், நேர்மை போன்ற எதுவும் தற்போது மிச்சமில்லை. 1947-க்குப் பிறகு உறுதியான—உருப்படியான வேலைத் திட்டமும் அதற்கில்லை. கம்யூனிஸ்டுக் கட்சி, மராட்டிய மாநிலத்தில் பலப்பல கோஷ்டிகளாகப் பிளவுபட்டுக் கிடக்கிறது.

ஸர்தேசாய் தலைமையில் ஒரு கோஷ்டியும், ரணதிவே கோஷ்டியொன்றும் மற்றும், இங்கும் அங்குமில்லாத மர்ஜிகர் கோஷ்டி ஒன்றுமாகக் கம்யூனிஸ்டுக் கட்சி பிளவு பட்டிருக்கிறது. ஆனல், எண்ணிக்கையிலும் செல்வாக்கிலும் உயர்ந்துள்ளதாகக் கருதப்படும் ரணதிவே கோஷ்டி செஞ்சீனவை ஆதரிப்பதாக இருக்கிறது. கட்சி உறுப்பினர்களுக்கு இன்றுங்கூட சீன ஆதரவுப் பாடங்கள் போதிக்கப்படுகின்றன.;'

நமது கலாச்சாரக் குழுவின் வருமானக் கணக்கைக்கூடத் தரவில்லையென்றும், ஒவ்வொரு இடத்திலும் பணத்தை விழுங்கினர். தனக்குக் கிடைக்க வேண்டிய பங்குத் தொகைகூட கிடைக்கப் பெறவில்லையென்றும் குற்றஞ் சாட்டுகின்ற மிஸ்டர் உமர்ஷேக், "உயர்ந்ததொரு இலட்சியத்திற்காகவே வாழ்கிறோம்" கம்யூனிஸ்ட் கட்சி "சமுதாய சமதர்மத்திற்காகப் பாடுபடுகிறது" என்ற நல்லெண்ணத்தோடு இவ்வளவையும் பொறுத்துச் சகித்துக் கொண்டிருந்தேன் என்று குறிப்பிட்டுவிட்டு, தமது, ஏமாற்றத்தையும் வர்ணித்துள்ளார். மேலும் அவர் எழுதியிருப்பதாவது:—

"மன்னர்களின் நிலையில் கட்சித் தலைவர்கள் சிலருடைய அந்தஸ்து அமைந்திருக்கிறது. அவர்கள் தங்கள் விருப்பம் போல் யதேச்சையாக எதையும் செய்கிறார்கள். அவர்களின் வழியில் எவரேனும் குறுக்கிட்டால் அவரைத் தீர்த்துக்கட்டிவிடுகிறார்கள். வாலிபர்கள் பலருடைய வாழ்க்கை இவ்வாறே தொடர்ந்து பாழ்படுத்தப்பட்டு வருகின்றன. கட்சியில் இளம் இரத்தம் வருவது தடைப்பட்டு விட்டது. இப்போது இருக்கும் இரத்தத்தின் ஒரு பகுதி குளிர்ந்து உறைந்து விட்டது; சிறிதளவுள்ள நல்ல இரத்தத்தையும் கேடுபடுத்தி வருகிறார்கள்.

வகுப்புவாதத்தின் வைரியென தன்னைக் கம்யூனிஸ்ட்டுக் கட்சி கூறிக்கொண்டாலும், அதன் பிரதானத் தலைவர்களிடையே கடுமையான வகுப்புவாதம் தாண்டவமாடுகிறது; கடைந்தெடுத்த வகுப்பு வாதிகளாகத் திகழ்கிறார்கள். குடிகாரர்களும் சாராயம் காய்ச்சுவோரும் கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் கார்டுகளைப் பெற்றுக்கொண்டு கவுன்சில் கூட்டங்களில் கலந்து பழம்பெரும் தலைவர்களை இழிவுபடுத்தி உளறுகின்றனர். இவர்களை எவரும் தடுக்க முடியாது. அதே சமயத்தில் இவர்கள் பம்பாய் மில் தொழிலாளர்களின் மிகப் பெரிய தலைவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

ஆகவே, கம்யூனிஸ்ட்டுக் கட்சியில் நான் இதுவரை வகித்து வந்த சகல பொறுப்புக்களிலிருந்தும் ராஜினமா செய்கிறேன்.

எனது விலகலைத் தொடர்ந்து 'முதலாளி வர்க்கத்தின் அடிவருடி, எனக் கம்யூனிஸ்ட்டுக்கள் இனித் தூற்றுவர் என்பதும், 'முதலாளிவர்க்கத்திற்குத் தன்னைத்தானே விலைகூறி விட்டதாக' என்னை இழித்து இகழ்வர் என்பதும் எனக்குத் தெரியும். ஆயினும் அது பற்றியெல்லாம் நான் கவலைப்படப் போவதில்லை. என்னுடைய முடிவும், நான் தற்போது எடுத்து வைத்திருக்கின்ற சுவடும் நிதானமாக ஆழ்ந்து சிந்தித்து, தெளிந்து ஆராய்ந்து மேற்கொண்டதாகும். எனவே, எதுவரினும் பொருட்படுத்தப் போவதில்லை."

பெருந்தன்மை என்பது உங்கள் பிறவியிலேயே கிடையாதா?

பாதுகாப்புக் கமிட்டிகளிலிருந்து கம்யூனிஸ்டுகள் விலக்கப் பட்டால் பாதுகாப்பு உற்பத்தி பாதிக்கப்படும்.

சென்னைக் கூட்டத்தில்
—மோகன் குமாரமங்கலம்

கம்யூனிஸ்டுகளை தேசீயப் பாதுகாப்பு உதவிக் கமிட்டிகளில் சேர்க்காமல் இருப்பது பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு ஆபத்தைத்தான் விளைவிக்கும்.

திருவனந்தபுரம் கூட்டத்தில்
—நம்பூதிரிபாட்

ஏன் இந்த மிரட்டல்?

பாதுகாப்புக் கமிட்டியில் உங்களைச் சேர்க்காவிட்டால், பங்காளி சீனக்காரனை பாக்கு வைத்து அழைத்து வந்துவிடுவீர்களா? அவனுக்குப் பாதை அமைத்துக் கொடுத்துப் பாலமாக இருப்பீர்களா?

நீங்கள் சீனக்காரன் பாக்கெட்டில் இருப்பதுபோல், தொழிலாள வர்க்கமும், விவசாயப் பெருங்குடிகளும், பொது மக்களும் உங்கள் பாக்கெட்டில் இருப்பதாக எண்ணமா?

சொல்லுங்கள்! பசுத்தோலை நீக்கிவிட்டு வாலடித்துக்கிளம்பும் வரிப் புலிகளே சொல்லுங்கள்!

நாடு உங்களைச் சந்தேகிக்கிறது! நல்லவர்கள் உங்கள் உறவை விரும்பவில்லை! இந்தச் சூழ்நிலையில் கொஞ்சம் பெருந்தன்மையோடு பேச வேண்டாமா? குலத்தளவேயாகுமாம் குணம் என்ற அளவில் பேசலாமா?

பதவியை இழந்த பிறகும், பலரின் குற்றச்சாட்டுகளுக்கு ஆளான பிறகும், கிருஷ்ணமேனன் என்ன பேசினர் என்பதைக் கவனியுங்கள்.

"என்னுடைய ராஜினமா நாட்டிலும், ஆட்சியிலும், சர்க்காரிலும் ஒற்றுமையையும் பலத்தையும் ஏற்படுத்த உதவுமானல் அதுவே எனக்குரிய பலன் கிடைத்து விட்டதாகக் கருதுவேன்.

நான் 'காண்டின்' வைத்துத் தொழில் நடத்தும் நிலை ஏற்பட்டாலும் எனக்கு தேசபக்திதான் பெரிது. என்னுடைய தேசத்தைக் காப்பாற்றியே தீருவேன்!"

கம்யூனிஸ்டுகளே! கவனித்தீர்களா? 'சங்கு சுட்டாலும் வெண்மை தரும்'என்ற சங்கநாதத்தை!

"எங்களை பாதுகாப்புக் கமிட்டியில் சேர்க்காவிட்டாலும், நாங்கள் எங்கள் தேசத்தைப் பாதுகாக்க உயிரையும் கொடுக்கத் தயார்" என்றல்லவா மோகனும், நம்பூதிரியும் பேசியிருக்க வேண்டும். ஏன் பேசவில்லை?

அது உங்கள் பிறவிக் குணம்!

வள்ளலின் வாய்மொழி!

எங்கள் அறிஞர் அண்ணு அவர்கள் சிறை மீண்டு வந்ததும், கூறினர்கள். சீனர் படையெடுப்பு ஏற்பட்ட பிறகு வேறு சர்ச்சையே இருக்க முடியாது என்று.

அதனுல்தான் என்னைப் போன்றவர்கள் துடிதுடித்து உதவி செய்ய முன் வந்தோம். எனக்கு டாக்டர் அனுமதி கிடைக்குமாயின் நாளையே ரத்தம் கொடுக்க இருக்கிறேன். அந்த அளவுக்கு அறிஞர் அண்ணுவின் சொல்லை செயலாக்க நாங்கள் முனைந்துள்ளோம்.

பேசத் தெரியாத குழந்தை முதல். நாளை சாக இருக்கின்ற கிழவர் வரை நம்முடைய இந்தப் பிரச்சினையால் ஒன்றுபட்டிருக்கிறோம் என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று.

நாங்கள் நாடு. விடுதலையாக வேண்டும் என்று கூறுபவர்கள். இந்தியத் துணைக் கண்டமே சுதந்திரம் இழக்கும் நிலை வரும்போது எப்படி அதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியும். சுதந்திரத்தை இழந்த பிறகு பெரும் புகழ் பெற்ருலும், மாடமாளிகையில் வாழ்ந்தாலும் பயனில்லை.

இதை உணர்ந்த காரணத்திஞல்தான் நான் எங்கள் தலைவர்களைக்கூட கலந்தாலோசிக்காமல் முதலமைச்சரிடம் நன்கொடை தந்தேன். நன்கொடை தருவதிலும் தாமதம் கூடாது என்பதற்காகத்தான் உடனடியாக என் செயலாளரிடம் தொகையைக் கொடுத்தனுப்பினேன்.

இந்த உணர்வு எங்கள் கழகத்தின் ரத்தத்தோடு, உயிரோடு, கலந்து ஒன்று. இதைத் தவிர நாங்கள் வேறு முடிவு எடுத்திருக்க முடியாது. வேறு முடிவு என்பது எங்கள் லட்சியத்திற்கெதிரான நாணயத்திற்கெதிரான முடிவாகத்தான் இருக்க முடியும்.

ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியை நான் அறிவிக்கிறேன். இனிமேல் எனக்கு ஒப்பந்தமாகும்படங்களுக்கு வாங்கும் தொகையில் நானில் ஒரு பகுதியை பாதுகாப்பு நிதிக்குத் தரப்போகிறேன்.

தமிழக மேல் சபையில் எம். ஜி. ஆர்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு திங்களில் அதைச் செயல்படுத்தி அறிஞர் அண்ணுவின் தலைமையில் ஆயிரக்கணக்கான ரிக்ஷா தொழிலாளர்களுக்கு மழைக்கோட்டு வழங்கினர்.

அரச போகத்தைத் துறந்து புத்தன் வீதி வழியே நடந்து வந்துகொண்டிருந்த பொழுது, நடக்கமுடியாமல் தவித்துக் கொண்டிருந்த ஆட்டுக் குட்டியைப் பார்த்து வேதனையடைந்து, இந்த வாயில்லா ஜீவனை நாம் தூக்கிக்கொண்டு நடந்தால் என்ன என்று எண்ணி, அதைத் தோளிலே தூக்கிச் சுமந்து சென்றதாக சித்தார்த்தன் வரலாறு நமக்குச் சொல்லுகிறது.

புத்தனின் இதயம் புழுதியோடு மக்கிப்போய்விடவில்லை. புரட்சி நடிகரின் உள்ளத்தில் அது வைரமாய் பதிந்திருக்கிறது. அதனுல்தான் ஏழைகளுக்கு இடர் என்ருல் அவர் இதயம்துடிதுடித்து,ஓடிப்போய் துயர் துடைத்து, மகிழ்ச்சியோடு திரும்புகிறது.

வீடு தீப்பற்றிக் கொண்டதா? வெள்ளத்தில் குடிசைகள் மிதக்கிறதா? ஏழைகள் குந்தியிருக்க குடிசையின்றி தவிக்கிருர்களா? அங்கே எம். ஜி. ஆரைப் பார்க்கலாம். அரசினர் வருவதற்கு முன்னுல் அவர் உதவி அங்கே செயல்பட்டுக் கொண்டிருப்பதைக் காணலாம்.

ஆரம்பப் பள்ளிகளுக்கு, அனுதை இல்லங்களுக்கு,கல்லூரி வளர்ச்சிக்கு, மருத்துவமனைகளுக்கு அவர் அள்ளிக்கொடுத்திருக்கும் நிதிபற்றி ,இந்தநாட்டு அமைச்சர்களே மனங்குளிரப் பாராட்டிப் பெருமைப்படுத்தி புகழாரம் சூட்டியிருக்கிருர்கள்.

இந்தியத் துணைக்கண்டத்தின் எல்லைக்கு வந்திருக்கும் ஆபத்தைத் தடுக்க முதன் முதலாக 75000-ம் பெருந்தொகை கொடுத்த—பெருந்தகை இவர் தான்.

அது மட்டுமல்ல, தான் நடிக்கும் படத்தின் மூலம் தனக்கு வரும் வருமானத்தில் கால் பகுதியை தேசியப் பாதுகாப்பு நிதிக்குக்கொடுக்கமுன்வந்துள்ள கருணை உள்ளத்தை இன்று நாடு பாராட்டிக்கொண்டிருக்கிறது.

நமது தலைமுறையில் வாரி வழங்குவதில் **தலைப்பிள்ளையாக இருந்துவரும் எம். ஜி. ஆர். வாழ்க! பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகிறோம்.**

கல்யாண சுந்தரனுரே...

சீனப்படைகளை விரட்டியடிப்பதற்கு ஐ. நா. படைகள் இங்கு வரவேண்டும் என்று தி. மு. க. தலைவர் நெடுஞ்செழியன் பேசியிருக்கிருர். சொந்த பலத்தில் நம்பிக்கையில்லாதவர்கள்தான், ஆண்மையில்லாதவர்கள்தான் இப்படிக் கூறுவார்கள்.

பெரம்பூர பொதுக் கூட்டத்தில் (கம்) கல்யாணசுந்தரம்

ஐயா,

ஆண்மை வழிந்தோடும் கல்யாணசுந்தரனுரே!

காங்கோவில் குழப்பம் நடந்துகொண்டிருந்த பொழுது, ஐ. நா. படை போயிற்றே, அதை உங்களுக்கு மாமா உறவுள்ள மாஸ்கோ வரவேற்றதே, நீங்களும் வாய் மூடிக் கிடந்தீர்களே அது ஆண்மையற்ற செயலா?

ஐ. நா. படை உதவி நாடிய 'ஆண்மையற்ற' லுமும்பாகொல்லப்பட்டவுடன், லுமும்பா பல்கலைக் கழகம் என்று ரஷ்யாவில் உங்கள் குருஷாவ் ஏற்படுத்திஞரே அது ஆண்மையற்ற செயலா?

கொஞ்ச நாட்களுக்கு முன் வடக்கே நடைபெற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டுத் திடலுக்கு லுமும்பா நகர் என்று பெயர் வைத்தீர்களே—வைக்கலாமா?—ஏன் உங்களுக்கு ஆண்மையில்லையா?

ஐ. நா. சபையில் காஷ்மீர் பிரச்சினைபற்றி மணிக் கணக்காக விவாதிக்கிருேமே! அதை நாற்பத்திநாலு கோடி மக்களால் தீர்த்துக்கொள்ள இயலாது என்ரு? அப்படி ஐ. நா. சபையில் விவாதிப்பது ஆண்மையற்ற செயல்தாஞ?

கம்யூனிஸ்டல்லாத நாடுகளிலிருந்து இன்று யுத்த ஆயுதங்கள் வருகின்றவே! அதை நேரு வரவேற்கிருரே—அவர் ஆண்மையற்றவரா?

ஆண்மை வழிந்தோடும் வீராதி வீரர்களே சொல்லுங்கள்!

எங்களுக்குத் தெரியும்! ஐ. நா. படை கூடாதென்று நீங்கள் ஏன் சொல்லுகிறீர்கள் என்று—

இங்குள்ள வீரரோடு ஐ. நா. படையும் உதவிக்கு வந்து சேர்ந்து, சீனுக்காரனை விரட்டியடித்து, இந்தியத் துணைக்கண்ட சுதந்திரம் காப்பாற்றப் பட்டுவிட்டால் உங்களின் நீண்டநாள் கனவு கானல் நீராகிவிடும்! அந்தப் பயத்தில்தான் இப்படி வெறிபிடித்து உளறுகிறீர்கள்.

வீடு தீப்பற்றி எரிந்துகொண்டிருக்கு பொழுது பையர் எஞ்சினை அழைப்பது ஆண்மையற்ற செயல் என்று கூறிஞல்,நல்லவர் சினம்கொள்வர்! நாடு கை கொட்டிச் சிரிக்கும்! காரி உமிழும்!

இவர்களைப்பற்றி

ஜெனரல் கரியப்பா

இந்தியா இரண்டு பகைவர்களை எதிர்த்துப் போராட வேண்டியதிருக்கிறது. ஒரு எதிரி நமது எல்லைக்கப்பாலுள்ள கம்யூனிஸ்ட் சீன; மற்ருெரு எதிரி இந்தியாவுக்குள்ளேயே இருக்கும் இந்தியக் கம்யூனிஸ்டுகள். படையெடுத்துவரும் பகைவனைவிட, நாட்டுக்குள்ளேயே இருக்கும் பகைவர்களால் தான் ஆபத்து அதிகம். அவசியம் ஏற்பட்டால் உள் நாட்டிலுள்ள இந்தப்பகைவர்களை சிறைக்குள்தள்ளி விடலாம்.

ஃ ஃ ஃ

கம்யூனிஸ்ட் கட்சியினர் உண்மையிலேயே மக்களுக்குச் சேவை செய்ய விரும்பிஞல்,அவர்கள் பலாத்காரத்தில் வைத்துள்ள நம்பிக்கையை விட்டுவிடவேண்டும். வெளி நாடுகளின் கைப்பொம்மைகளாக அவர்கள் இருக்கக் கூடாது.

— லால்பகதூர்சாஸ்திரி

[4-ம் பக்கச் தொடர்ச்சி]

புகழ் ஒரு பூ! மணம் வீசி அது மாற்ருரை மயக்குவதால் அதற்கு எருவித உயிர்ச் சக்தியும் இருப்பதாகத் தெரிகிறது.

விளைவுகட்கு வித்துக்கள் எத்துணையதோ; அத்துணையதே புகழுக்கும் பண்பு.

ஒருவன் பிறவியின் தன்மையை அறியவேண்டுமானுல், அவன் ஈட்டிய இசையே அதற்கு அளவுகோலாகும்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்ருமை நன்று" என்ருர், வையத்திற்கு வாழ்க்கை நெறி வகுத்த வள்ளுவப் பெருந்தகை.

"தோன்றிவிட்ட மனிதன் தன்னைப் புகழுக்குரிய பண்புகளோடு அமைத்துக்கொள்ள வேண்டும். இன்றேல், தோன்ருமையே நன்று என்று பிறவியை வெறுத்து எழுதி விட்டார்.

மனித இன வரலாற்றுக்கு இஃதோர் மறைமொழி.

மனிதா, மரம்போல் வதியாதே. அவனி வியக்கும் வண்ணம் வாழ்; இன்றேல், இழிந்தொழிக்கப்படுவாய் என்ற தத்துவப்பொருளும் இலைமறைகாயைப் போல இணைந்து கிடப்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டிய ஒன்ருகும்.

இதனையே, வள்ளுவஞர் 'தோன்ருமை நன்று' என்று இயம்பிஞர் போலும்.

மனிதனுகத் தோன்றிவிட்ட பிறகு, 'காதவழிபேர் இல்லான் கழுதை' என்ற இழிநிலைக்கு இடம் பெறக் கூடாது.

ஐந்தறிவுகள் புகழ் பெருதது கண்டு உலகு இகழாது, ஆறறிவு பெற்ற மனிதன் புகழோடு வாழவில்லையெனில், உலகு அவனைக் கண்டு எள்ளும்.

பிறவியின் உரிமை புகழ்; அதை அடைய உழைப்பது அனைவரின் கடமை!

புகழீட்டி வாழ்பவனுல், நாடு—மொழி — இனம் — செயல் எல்லாமே பெருமையடையும்; போற்றவும்படும்.

உலகம் புகழாளனை உற்று நோக்கும், உவந்துரைக்கும், உவகையோடு தட்டிக்கொடுத்து வரவேற்கும், வாழ்த்தும்.

ஈருயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்த வள்ளுவரும் — புத்தரும் ஏசுவும் நபிமுதல், இன்றைய காலத்திலே இருந்த காந்தியும் புகழப்படுவதேன்?

காலத்தை வென்றல்லவா இந்த உத்தமர்கள் தமது புகழைப் பொறித்துவிட்டுப் போய்விட்டார்கள்.

ஈதன்ருே, அவர்களது வாழ்க்கைக் காவியத்திற்கு அமைந்து விட்ட புகழ் இலக்கணம்!

எனவே, புகழ் எளிளிதில் பெற முடியாததொன்று. அரியதை அல்லலுக்கு அஞ்சாது ஆற்றிடும் அருந்திறன்—பண்புகள் எவரெவருக்குண்டோ அவரவர் இறுதியில் புகழ் நிலாவாக நின்று நமக்கெல்லாம் எடுத்துக்காட்டாக விளங்குவர் என்பது உண்மையன்ருே?

அழகான மலர்களை விரைந்து பெற நினைப்பவன் முதலில் முட்களால் தாக்கப்படுவானும்.

'மூர்' எனும் அறிஞர் இவ்வாறு கூறுகிருர். முட்களின் தாக்குதலுக்கு முணகிஞல் — அஞ்சிஞல் அழகான மலர் கிடைக்குமா?

இது புகழைப் பெறுபவர்கட்கு ஒரு அறிவுரை 'ஆத்திச்சூடி' யல்லவா?

அரிய முயற்சியிஞல் புகழைப் பெற்ருல்தான், அதன் அருமை பெருமை—இனிமையைப் பெற்றவனுலும்—உலகாலும் உணர்ந்து உணர்ந்து போற்றப்படும்.

போலிப் புகழைத் திடீர் திடீர் என்று பெறுபவன், காலமெனும் காட்டாற்றில்சிக்கிய காய்ந்தப் புல்லைப் போலாவான்.

பெரும் வருத்தத்திற்கு பிறகு ஒருவன் பெற்றசுகமும்—இனிமை பயப்பதாயிருக்குமாம்.

'டிரைடன்' எனும் அறிஞர் புகழைப் பெறும் உழைப்பின் வழியைக் கூறுகிருர்.

வருத்தமோ–துன்பமோஇன்றி, எவராலும் எளிதில் புகழைப் பெற முடியாது என்பது இதனது குறிப்புரையாகும்.

இதுவும் ஒரு முதுமொழி.

"உழைப்பு இன்றேல் ஊதியம் இல்லையாம்."

பணமில்லாதவனைப் பிணத்திற்சீடாகவன்ருே பார் கருதுகிறது. அதுபோலவே, புகழ் இல்லாதவன் மனிதப் பிணமாகவே மதிக்கப் படுவான்.

புகழைப் பெற முடியாத புன்மை மதியினர் பலர், தம்மை எவராகிலும் புகழ்ந்துரையாரோ என்று ஏங்கிக் கிடப்பர். இதற்கன்று புகழ் என்று பெயர். புகழுருவில் காணப்படும் கானல் நீர்!

அடுத்த இதழில்.........

"கம்யூனிஸ்டுகளின் பத்தினித்தனம்"

பற்றிப் படப்பிடிப்புக் கட்டுரை

'ஜனசக்தி'யின் தவருன கேலிச்
சித்திரததுக்கு சம்மட்டியடி தரும் திருத்தம்

கவிஞர் முடியரசன்—துறையூர் ந. அலி
ஆகியோரின் எழுச்சிமிகு கவிதைகள்
இடம் பெறுகின்றன.

கேள்வி—பதில் பகுதி தொடங்க இருக்கிருேம். தோழர்களின் சுவையான கேள்விகளுக்கு வணங்காமுடி சூடான பதில் தருவார்.

கேள்வி அனுப்பும் நண்பர்கள்—"கேள்வி—பதில் பகுதி" "தென்னகத் தலைவன்" சென்னை-6 என்ற முகவரிக்கு எழுத வேண்டுகிருேம்.

யாரையடா சொன்னய்...

திராவிட நாடு பற்றிப் பேசாதே பேசாதே என்று சொல்லி வந்தோம். இப்போது அவர்களாகவே நிறுத்தி வைத்து விட்டு எங்கள் இதயமூச்சை நிறுத்தி வைத்துள்ளோம் என்கிருர்கள். இதுஎன்ன ரேடியோப் பெட்டியா நிறுத்தி வைக்க!

தி. மு. க. சுதந்திரஇயக்கமானுல் இப்போது 'நல்ல' சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு திராவிட நாட்டுக்காக 'செத்துமடி' என்று சொல்லியிருக்க வேண்டும்.

த. கம். மாநாட்டில்
கல்யாண சுந்தரம்

அடப் பாவிகளே!

சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொள்வது

சதிக்கு உடந்தையாக இருப்பது, துரோகத்திற்குத் துணை போவது, பகைவனேடு பங்காளி உறவு கொண்டாடுவது—

இது உங்களுக்கே உரித்தான நரிக்குணமல்லவா?

தர்மத்தின் வழி தவருமல் உள்ள கொள்கையை இதயம் திறந்து பேசுவது எங்கள் அண்ணனின் வழக்கமாயிற்றே! அவரைப் பார்த்தா சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு 'திராவிடநாடு கேள்' என்று சொன்ஞய்?

அட சதிகாரக் கூட்டமே !

சீனுக்காரன் உள்ளே வந்து விட்டால் நமக்குத் தானே பதவி என்று சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு, "சீனு செய்தது ஆக்கிரமிப்பே அல்ல" என்று கமிட்டியில் விவாதம் செய்தது உங்கள் இராமமூர்த்தி கூட்டமல்லவா?

எந்த நேரத்திலும் இந்தியாவைக் காட்டிக் கொடுக்க கங்காணி வேலை செய்து கொண்டிருந்தது உங்கள் ரணதிவே கும்பல் அல்லவா ?

நேருவைச் சர்வாதிகாரி என்று வர்ணித்து அவர் மீது பழிசுமத்தித் துண்டுப் பிரசுரம் வெளியிட்டு ஐந்தாம் படை வேலை செய்தது இலங்கைக் கம்யூனிஸ்டுக் கட்சி அல்லவா?

அத்தனை துரோகத்திற்கும் மொத்த உருவமாய் உள்ள கம்யூனிஸ்ட் கழுகே! எங்களைப் பார்த்தா சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொள் என்கிருய் ?

அது உன் குணம்! நீ, காட்டிக்கொடுக்கும் கங்காணிகள் பரம்பரை!

நாங்கள் மயிர்நீப்பின் உயிர்வாழாக் கவரிமான் பரம்பரை.

யாரைப் பார்த்துச் சொன்ஞய் அப்படி!

இதோ! உனக்காகவே ஔவையார் பாடிவைத்த பாடல். அதைத் தந்து இதை முடிக்கிறேன்.

எட்டேகால் லட்சண மே! எமனே றும்பரியே!
மட்டில் பெரியம்மை வாகனமே!—முட்டமுட்டக்
கூரையில்லா வீடே! குலராமன் தூதுவனே!
யாரையடா சொன்ஞயடா!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

போன்றது; பர்மா மலாயா சிங்கை விடுதலை இயக்கம் போன்றது. அது பாகிஸ்தான் விடுதலை இயக்கம் போன்றதன்று. திராவிடத்தின் நட்பு பிரிட்டனின் நட்புப் போன்றது. மலாயா பர்மா இலங்கை நட்பு போன்றது. அவ்வப்போது அது பிரிட்டனைப் போல, இலங்கை பர்மா மலாயாபோல, இந்தியாவுடன் தாயாதி வழக்காடும். ஆனால் தாயாதிகள் போலவே பொது ஆபத்து வந்தபோது, வழக்கை நிறுத்தி மரபுப் புகழை வலிமைப்படுத்தப் பாடுபடும்.

திராவிடம் தன் விடுதலை இயக்கத்தின் போதும் விடுதலையின் போதும் அதற்குப் பின்னும் இந்தியாவுடன் நேசக்கரம் கோத்தே தாயாதி வழக்காடத் துணிந்துள்ளது. தாயாதிவழக்கில் எவ்வளவு அது உரிமை கொண்டாடுகிறதோ அதனிலும் பன்மடங்கு மிகுதியாகத் தாயாதியுடன் பாசமும், பொது மரபு காக்கத் தியாகம் செய்யும் முனைப்பும் கொண்டது. தென்னாட்டுக் காந்தியின் சீரிய வீறுர்ந்த புன்முறுவல் பூத்த அருள் முகத்தின் மூலம், வீரச் செயல் மூலம் திராவிடம் இன்று இந்திய மாநிலத் தேசீயத்துக்குத் தரும் ஆழ்ந்தப் படிப்பினை இதுவே.

நாநுனியில் அமிர்தமும் நெஞ்சில் நஞ்சும் கரந்த சீனு ரஷ்யா போன்ற நண்பர்களைத்தான் நேருவின் இந்தியா என்றும் நம்ப இருக்கிறதா? பிரிட்டன் அமெரிக்கா போன்று மனிதத் தன்மையின் குறைபாட்டுடனே மனிதத் தன்மையின் நல்லுணர்ச்சியும் உள்ளூரக் கொண்ட நண்பரை நம்பமுடியுமா? இனிக்க இனிக்க மாநிலத் தேசீயமே பேசி அதன் அடிப்படையைப் பலவீனப்படுத்தும் பொதுவுடைமையாளரைத் தான் அணைத்து மகிழும் மதியுடன் அது இருக்கப்போகிறதா அல்லது தாயாதிச் சண்டையிட்டும், தாயாதியாக ஒத்துழைக்க முந்தும் திராவிட இயக்கம் என்ற சிங்கத்தின் பிடரியுடன் பிடரியாக புரளும் உரம்படைத்த மதியுடன், உலக அரங்கில் பிரிட்டனைப் போல, பிரான்சைப்போல எங்கள் மேலுரிமைகளை விட்டுக்கொடுத்துப் பழைய ஏகாதிபத்தியத்தைப் புதிய தோழமைக்குழுவாக்குகிறோம், பாரீர்! என்று கூறும் புதுமதி பெறும் துணிவு பெறப்போகிறதா?

இது எப்படியாயினும் ஆகுக. தம்பி தவறு காரணமாக அண்ணன் தம்பியைப் பகைக்கப் போவதில்லை. தம்பி பிறக்கும் முன்பே அண்ணன் கொண்ட உறவு அவன் உறவு. துவர்க்கும் மண்ணையும், துடிக்கும் எறும்பையும் பிடித்து வாயிலிடத் துடித்துக்கொண்டிருந்த பருவத்திலிருந்து தம்பிக்குத் தம்பியிடம் இல்லாத நேசத்தை அண்ணன் அவனிடம் கொண்டுவிட்டான். தம்பி ஆளத் தொடங்கியபோது அண்ணன் வாதிடலாம். ஆனால் தம்பிக்கு ஆபத்து வந்தால் அண்ணன் வாதிட முடியுமா? —தம்பி தடுத்தாலும் தம்பிக்கு அவன் உதவாமலா இருக்க முடியும்?

இந்தியாவுடன் திராவிடம் கொண்ட உறவு இத்தகைய உறவு. 'இதனை இந்திய வரலாறு எழுதியோர் தம்பிக்குக் கற்றுக் கொடுக்கத் தவறினர். திராவிட வரலாறோ இன்னும் சரிவர எழுதப்படவில்லை. ஆயினும் திராவிட இயக்கம் தேசீய விடுதலை இயக்கத்தையே நிறுத்தி மாநில எதிர்ப்பு இயக்கம் நடத்தக் கட்டளை இட்டது மூலம் தென்னாட்டுக் காந்தியார் மாநிலத்திற்கும் வருங்காலத் திராவிடத்தைக் கனவு காணும் செம்மல்களுக்கும் பல அரசியல் படிப்பினைகளைத் தந்துள்ளார்.

திராவிடம் கோரும் தேசீயம், நாடும் விடுதலை-திராவிடம் முன்போலத் தங்குதடையற்றுவளர்ச்சியுற்று உலகில் முன்னணியில் விளங்க வைப்பதற்குரிய ஒரு வாய்ப்புப்பெறுவதற்காகத்தான். ஆனால் அதன் முழு விளைவு பயன், முழு நோக்கம் இத்துடன் நின்றுவிடாது. திராவிடத்துக்கும் இந்திய மாநிலத்துக்கும் இன்று இருக்கும் நல்லுறவு திராவிட விடுதலையால் ஒரு சிறிதும் குறையாது, பன்மடங்காகப் பெருகும். ஏனெனில் திராவிடம் தேசியம் மட்டுமல்ல, உண்மையான தேசீயம், உயிர்த் தேசியம்; தன்னை வளர்க்கும் தேசியம் மட்டுமல்ல, தன்னைச் சூழ உலக முழுதும் வளமான தேசியங்களை வளர்க்கும் இயக்கம் ஆகும்.

திராவிட விடுதலைக்குப்பின் இந்தமுறையைவிடத் திராவிடம் வலிமை மிக்கதாக இருக்கும். அதுமட்டுமன்று, திராவிடத் தேசிய விடுதலைக்குப்பின் இந்தியா இன்றைய இந்தியாவை விட எவ்வளவோ வலிமைமிக்கதாகவே இருக்கும். இதைத் தென்னாட்டுக் காந்தியார் அறிஞர் அண்ணாவின் செயல்முறை ஆர்வமே சுட்டிக் காட்டுவதாகும்.

வருங்காலத் திராவிடத்திற்கு வடதிசைக் கோட்டையாக இந்தியாவும் இமயமலையும் விளங்கும். அதன் நிலவழிப் பாதுகாப்பின் பெரும் பொறுப்பு அதன் பங்காளித் தேசியமான இந்தியாவின் தனி பொறுப்பாக இருக்கும். இன்றுபோல அன்றும் என்றும் சீனு போன்ற அயல் ஆக்கிரமிப்பாளரை எதிர்ப்பதில் திராவிடமும் இந்தியாவும் ஒருங்கு தோளுடன் தோள் சேர்ந்து நின்று போரிடும். இமயமலை திராவிடமும் இந்தியாவும் இணைந்து தம் எல்லையைப் பாதுகாத்துக்கொள்ளும் போர்க்களமேயாகும். அதே சமயம் இந்தியாவின் தென்திசைக் கோட்டையாய்த் திராவிடம் அமைத்திருக்கும் இந்தியாவின் கடல் வழிப் பாதுகாப்பின் பொறுப்பு முழுவதும் இந்தியாவின் பங்காளித் தேசியமான திராவிடத்தின் தனிப்படை சார்பாக இருக்கும். இன்று வடதிசையில் நிலவழியில் சீனு எதிர்ப்பதுபோல், வருங்காலத்தில் வேறு எந்தப் பெரிய எதிரியாவது கடல் வழி எதிர்ப்பதானல், இந்தியாவும் திராவிடமும் தோளோடுதோள் சேர்ந்து நின்று போராடும். நில வழியில் இமயமலை இருதேசியங்களுக்கும் பாதுகாப்புப் போர்க்களமாவது போல இருதேசியங்களுக்குமுரிய நீர்வழிப்பாதுகாப்புப்போர்க்களமாகத் தென்மாகடல் விளங்கும்.

திராவிடத்தேசியத்திற்கும் இந்தியாவிற்கும் உள்ள தொடர்பின் தன்மையைத் திராவிடத் தேசிய இயக்கத்தின் இந்த இளமைக் காலமே' இவ்வாறு நன்கு சுட்டிக்காட்டிவிட்டது. அத்தொடர்பு பாகிஸ்தான் — இந்தியாத் தொடர்பு போன்ற பிரிவினைத் தொடர்பு அல்ல. சந்தேகம், போட்டிபகைமை, உள்மாற்சரிய உருவங்களைக் கொண்ட தொடர்பாக இராது. இதுமட்டுமன்று. இலங்கை பர்மா மலாயா சிங்கையுடன் இந்தியா கொண்டுள்ள தொடர்பு சுமுகமான தொடர்பே. ஆனாலும் வருங்காலத் திராவிட—இந்தியத் தேசியத் தொடர்பு இவற்றை விட இன்னும் மிக நெருக்கமிக்க தொடர்பாய் இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் இன்று இந்த நாடுகள் பாகிஸ்தானைவிட இந்தியாவுடன் அவ்வளவு நேசமாக இருக்கக் காரணமே திராவிடத் தேசியம்தான் —பாகிஸ்தானில் திராவிடரோ தமிழரோ குறிப்பிடத்தக்க அளவில் கிடையாது; இலங்கையில், பர்மாவில், சிங்கையில், திராவிட நாட்டுத் தமிழர்கள் முக்கிய உறுப்பினராயிருக்கிறார்கள். இந்தியாவுடன் அந்நாடுகள் எளிதில் ஒன்றுபட முடிவதற்குரிய காரணம் இதுவே, திராவிடம் விடுதலை பெற்றபின்; இந்தியாவுடன் இந்த நாடுகள் இன்றைவிட மிகநெருக்கமானநட்புடைய நாடுகளாகவிளங்கும், திராவிடம் இந்தியாவுக்கும் அந்நாடுகளுக்கும் இடையேயுள்ள நட்பை வளர்க்கும் இடைநிலைப் பண்ணையாய், நேசப்பாலமாய் இயங்கும்.

திராவிடத் தேசியம் என்ற பெயர் கேட்டவுடன் இன்று காங்கிரஸ் இயக்கம் சார்ந்த இந்தியத்தேசிய நண்பர்கள் பலருக்கு ஆராயாக் கோபம் வருவதுண்டு. ஆனால் இந்தக் கோபமும் வெறுப்பும் திராவிடத் தேசியத்தால் ஏற்பட்டதன்று. திராவிடம் என்றவுடனே அவர்கள் பாகிஸ்தானை நினைத்துக் கொள்வதாலும், பாகிஸ்தானை நினைத்தவுடனே இந்துஸ்தானை நினைத்துக்கொள்வதாலும் ஏற்பட்ட விளைவேயாகும்.

வீட்டில் மனைவியுடன் பூசலிட்டுவிட்டு மனக் கசப்புடன் கடைக்கு வந்த முதலாளிக்குக் கணக்கப்பிள்ளையிடம் வரும் கோபம் போன்றதுதான், காங்கிரஸ்காரர்சிலருக்குத்திராவிடத் தேசியத்திடம் வரும் ஆராயாக் கோபம்! தவிர, பாகிஸ்தான்—இந்துஸ்தான் சண்டை காங்கிரசால் ஏற்பட்டதல்ல. அது காங்கிரஸ் விதைத்த விதையுமல்ல. அது வடதிசையில் இரு தேசியங்களையும் கெடுத்த ஒரு நோய். இருவருக்கும் பொதுவான ஒரு நோயின் விளைவை, பாகிஸ்தான்மீதே முற்றிலும் சுமத்துவதோ, அதை இன்னொரு தேசியத்திலும் எதிர்பார்த்து போபப்படுவதோ தவறு.

உண்மையில் வடதிசைவகுப்பு வேற்றுமைப் போர்களிளெல்லாம் நடுநின்று நிலைமை காத்தவர்கள் தென்னாட்டுத் தொண்டர்கள், அதிகாரிகள், தென்னாட்டுப் போலீஸ் என்பதைப் பலர் மறந்திருக்கமாட்டார்கள்.

திராவிடத் தேசியம் வடதிசையில் ஏற்பட்ட தேசியங்களுக்குள்ள நோயின் தொடர்பற்றது மட்டுமன்று. அந்த நோயையே தீர்க்கும் மருந்து இந்த தேசியத்தில்தான் இருக்கிறது, திராவிடத் தேசிய விடுதலை உண்மையில் இந்தியாவுடன் இலங்கை பர்மா மலாயா சிங்கை ஆகியவற்றை மட்டுமன்று, பாகிஸ்தானையும் ஒரே நட்புச் சூழலில் இணைத்து வைக்கும் ஆற்றலுடையதாயிருக்கும்.

இதுமட்டுமோ?

இடைக்காலங்களில் திராவிடம் அயலாருக்குப் பணிய நேர்ந்ததால்தான் இந்தியா சுதந்திரம் இழந்தது. அதன் பின்தான் இலங்கை, பர்மா மலாயாயா, இங்கை, சீனு, தென் பிராந்தியத்தீவுகளாகிய இந்தோனேசியா ஆகிய எல்லா நாடுகளும் அடிமைப்பட்டன. இதை வரலாற்றுமாணவர் மறந்துவிட்டிருக்க முடியாது. திராவிடம் விடுதலை பெற்ற அன்றே, இந்தியாவும் இந்த ஆசிய நாடுடனும் உலகில் மீட்கும் வலிமையுடைய நாடுகளாக, உலகநாகரிகமையங்களாக முன்னின்று மீண்டும் உயர்வுற்று ஓங்குதல் உறுதி.

இன்று பெயரளவில் இந்தியாவும் இரு நாடுகளில் பலவும் அரசியல் விடுதலை பெற்றுள்ளன. ஆயினும் இந் நாடுகள் அத்தனையுமே பெண்டாட்டி கட்டியும் பிரமசாரி, பிள்ளைப் பெற்றும் மலடி என்ற நிலையில்தான் இருக்கின்றன என்பதை எவரும் ஒப்புவர், இந்த நாடுகள் அனைத்தின் உண்மை விடுதலை, அவற்றின் விடுதலையின் விடுதலை, அவற்றின் விடுதலையின் உயிர் நிலை, திராவிடத்தின் விடுதலையிலேயே அடங்கியுள்ளது. திராவிடம் விடுதலையான அன்றுதான் கீழ்த்திசை மேல்திசையுடன் ஒப்பாக விளங்க முடியும். திராவிடம் விடுதலை அடைந்த அன்றுதான் இந்தியா ஆசியாவின் நடுநாயக வல்லரசாய், மலைகளிடையே இமயமலைபோல் நாடுகளிடையே ஒரு பீடு சான்ற நாயக நாடாக விளங்கும்.

இவை கனவல்ல, வரலாற்றடிப்படையான உண்மை என்பதைத் தென்னாட்டுக் காந்தியான அறிஞர் அண்ணாவின் வாழ்வே-அவர் திட்டங்களே காட்டவல்லன. வரலாற்றடிப்படையாக அவற்றைத் திராவிட இனத்தார் மட்டுமன்றி, உலக மக்கள் அனைவருமே கருத்தூன்றிக் கற்க வேண்டும்.

வளரும்

பொதுக்கூட்டம் என்பது விளையாட்டு மைதானமல்ல! தடுக்கி விழுந்தாலும், தண்டால் எடுத்தேன் என்று சொல்வதற்கு.

எதைப்பற்றிப் பேசினாலும் நிதானமாக, திறமையாக, தொடர்பாக உணர்ச்சியூட்டத் தக்க வகையில் பேசுபவனே பொதுமக்களின் பாராட்டுதலைப் பெறுவான்.

''அவன் பேச்சில் பொருளிருக்கும், இந்த விஷயத்தைத் தெளிவாக விளக்குவதில் அவனே வல்லவன், இந்த விவகாரத்தைப் பற்றி அவன் என்ன கருத்துச்சொல்லுகிறான், என்ன முடிவெடுக்கிறான்-அவன் கொள்கை ஏற்போம்—அவன் வழிச் செல்லுவோம்'' என்று மக்கள் முடிவெடுத்து நடப்பார்கள்.

அப்படிப்பட்ட சிறந்த பேச்சாளனை, ஆற்றல் மிக்கவனை, தெளிந்த கருத்துடைய தென்னகத் தலைவனை தமிழகம் சல்லடை போட்டுச் சலித்தெடுத்து அவன் காட்டும் அறவழியில்—உயர் வழியில் பீடு நடை போட்டு வருகிறது.

லட்சோப லட்சம் தம்பியர்களுக்கு அவன் ஒரே அண்ணன். கோடிக்கணக்கான இதயங்களுக்கு அவன் மானசீகத் தலைவன்.

காஞ்சியிலிருந்தாலும் சரி. தில்லிக்குச் சென்றாலும் சரி எங்கும் அவன் பெயர் ஜெயக்கொடி நாட்டிப் பறக்கிறதென்றால் அவன் ஆற்றல்களில் மிகச் சிறந்த ஒன்றான தெளிந்த பேச்சுத்தான் காரணம்.

இத்தகு பேச்சாற்றலைமேடையேறும் எல்லோரும் பெற்றுவிட முடியாது. முடியவில்லை! முயன்று தோற்றிருக்கின்றனர்.

சொல்லும் கருத்தை தெரிந்த தமிழில் அழகுபடத் தொடர்பாகச் சொல்லத் தெரியாவிட்டாலும், நிதானமாகப் பொருள் புரிந்து பேசவேண்டும்!

யார் முன்னனிலையில், எந்தச் சூழ்நிலையில், என்ன பேசப் போகிறோம் என்பதை முடிவெடுத்துக் கொள்ளவேண்டும், முடிவெடுத்துக் கொண்டிருக்கிற கருத்துச் சரிதானா என்பதை தெளிவாக்கிக் கொள்ளவேண்டும், தெளிந்து புரிந்து கொண்டதற்குப் பின்னால் அதை நிதானமாய்ப் பேசவேண்டும். அதுவும் அரசியலில் கதாநாயகர்களாக உள்ள, பொறுப்புள்ளவர்கள் மேடையில் பேசுவது கம்பியில் நடப்பது போன்ற கடினமான செயலாகும். கொஞ்சம் கால் தவறினால் பார்வையாளர்கள் சிரிப்பர்.

பொது மேடையும் அப்படித்தான். கைதட்டி ஆர்வமூட்டுபவர்கள், கைகொட்டிச் சிரிப்பார்கள்.

மக்கள் கைகொட்டிச் சிரிக்கும் அளவில்தான் நமது காமராசரின் கடற்கரைப் பேச்சு அமைந்திருக்கிறது.



விடுதலை பெற்று வெளிவந்ததும் கடற்கரையில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் அறிஞர் **அண்ணா அவர்கள் 'இப்பொழுது எல்லையில் நடக்கும் போர் இந்தியாவிற்கும் சீனாவிற்கும் நடக்கும் போர் என்று சொல்வதைக் காட்டிலும், ஜனநாயகத்துக்கும் சர்வாதிகாரத்துக்கும் நடக்கும் போர் என்பதுதான் சரியாகும். சர்வாதிகாரத்தை வீழ்த்தி ஜனநாயகத்தை வாழவைப்பதுதான் நமது முதல் வேலை''** என்று குடுப்பிட்டார்கள்.

சீனாவின் வெறிச்செயலை சர்வாதிகாரத்துக்கு ஒப்பிட்டார்கள். இந்தியாவின் நிலையை ஜனநாயகத்துக்கு ஒப்பிட்டார்கள்.

சர்வாதிகார வெறிபிடித்த சீனக்காரனை விரட்டியடிக்கும் பணியில் ஈடுபட்டுக் காயமடையும் நமது ராணுவ வீரர்களுக்கு குருதி கொடுக்கும்படி தி. மு. கழகத் தோழர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்கள். நிதி சேர்த்துக் கொடுக்கும்படி ஆணையிட்டார்கள். தேவையானால் இராணுவத்தில் சேர்ந்து சர்வாதிகாரத்தைவிரட்டியடித்து ஜனநாயகத்தை வாழவைக்கும்பணியில் ஈடுபடுமாறு கட்டளையிட்டார்கள். அதுவரை திராவிட நாடு விடுதலைப் பிரச்சினையை ஒத்திவைத்திருக்குமாறும் கேட்டுக் கொண்டார்கள்.

இதைச் சிறந்த முடிவென்று நாடு போற்றியது. நல்லவர்கள் வரவேற்றனர்.

ஆனால், தமிழகத்து முதலமைச்சர் காமராசருக்கு மட்டும் இந்த ஜனநாயகப் பேச்சுபிடிக்கவில்லை! பிடிக்கவில்லையோ புரியவில்லையோ அது நமக்குத் தெரியாது.

அவர் சமீபத்தில் கடற்கரையில் பேசியபேச்சைக்கவனிக்கும் பொழுது, பாவம் அவருக்குப் புரியவில்லை என்றுதான் தோன்றுகிறது.

''எல்லையில் நடந்து கொண்டிருக்கும் சண்டையை சிலர் ஜனநாயகத்திற்கும் சர்வாதிகாரத்திற்கும் நடக்கும் போர் என்கிறார்கள், இது யார் பேசவேண்டிய பேச்சு? அர்த்தமில்லாத கொள்கைகளைப் போட்டுக் குழப்பிக்கொண்டிருக்க இதுவா நேரம்? வீணாக ஏன் இந்தக் கொள்கை குழப்பம்?''

''ஜனநாயகத்திற்கும் எதேச்சாதிகாரத்துக்கும் நடக்கும் போர்'' என்று சிலர் கூறுகிறார்கள். இது யார் பேச வேண்டிய பேச்சு? என்கிறார் காமராசர்.

அப்படியானால் சீனாவைச் சர்வாதிகார நாடு என்று ஒப்புக் கொள்ள மறுக்கிறாரா? இந்தியாவை ஜனநாயக நாடு என்று சொல்லுவது அவருக்கும் பிடிக்கவில்லையா? இல்லை ஜனநாயகம் என்ற வார்த்தையைக் கேட்கவே அவர் காது கூசுகிறதா?

எல்லையைக் காக்கும் உணர்ச்சியால் கூடிவழிந்திருந்த கூட்டத்தைக் கண்டு நிதானமிழந்து பேசிவிட்டாரா? கம்பியில் நடக்கும் பணியில் அவர் கால் தவறிவிட்டார் என்றே கருதுகிறோம். இல்லையென்றால் ஜனநாயகம் என்றே பேசக்கூடாது என்று தடைவிதிப்பாரா?

''ஆற்றல் மிகுந்த ஒரு தலைவனின் பேச்சுக்கு—அதுவும் ஜனநாயகத்துக்கு மாசு கற்பிக்கும் வகையில் காமராசர் பேசியது அறியாமையின் விளைவு தான்'' என்று பொதுமக்கள் பேசிக் கொண்டதில் தவறில்லை.

''நாடு கவரும் நோக்கமும் ஏகாதிபத்திய மனமும்கொண்டு சீனா வேண்டுமென்றே நம்நாட்டின் மீது படையெடுத்திருக்கிறது''—என்கிறார் பாராளுமன்றத்தில் பிரதமர் நேரு.

''எப்பொழுதும் தங்கள் ஆதிக்கத்தை பலாத்கார முறையில் விரிவுபடுத்துவதுதான் கம்யூனிஸ்டுகளின் கொள்கை. ஆனால், ஜனநாயக முறையில் நம் உரிமையை நம்மால் காப்பாற்றிக் கொள்ள முடியும்'' என்கிறார் —மலாயா பிரதமர் துங்கு அப்துல் ரகுமான்.

''இது சர்வாதிகாரத்தை எதிர்த்து ஜனநாயகம் தொடர்ந்திருக்கும் புனிதப் போராகும். இதற்கு எங்கள் ஆதரவு எப்பொழுதும் உண்டு'' — என்கிறார் சைப்ரஸ் தீவின் மகாரியஸ் பாதிரியார்.

அறிஞர் அண்ணா அவர்களும் இந்தக் கருத்தைத்தான் தெளிவாகச் சொன்னார்கள்.

இனிக் காமராசர் எதைப் பற்றி பேசினாலும், அதைப்பற்றி மற்றவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதைச் சரியாகப் புரிந்துகொண்டு, நிதானமாகப் பேசினால் அவருக்கும், அவர் சார்ந்திருக்கிற பதவிக்கும் பெருமையாகும்.

''தென்னகத் தலைவன்'' வாசகர்களுககு

மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம்!

9-12-62 இதழில் ஆரம்பமாகிறது

எஸ். எஸ். தென்னரசு எழுதும்

தொடர் கதை

''வைராக்கியம்''

தென் மாவட்டங்களில்

தீரச் செயல் புரிந்த

வல்லவர்களின் உணர்ச்சி மலையே

இந்தக் கதை!

கிழமைதோறும் உங்களுக்குக் கிடைக்கும்

கொம்புத்தேன்! சுவைக்கத் தவறாதீர்கள்!!

விற்பனையாளர்கள் அதிகப் பிரதிகளுக்கு முன் பணத்துடன் எழுதுக.

ஆசிரியர், வெளியிடுபவர்: கோ. தினகரன், 31, பார்த்தசாரதிப்பேட்டைத் தெரு, சென்னை-6.

அச்சிடுபவர்: எஸ். சொக்கலிங்கம், பாரதம் பிரஸ், 14, உஸ்மான் ரோடு, சென்னை-17.